பக்கங்கள்:-24

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | கார்த்திகை 06 | வியாழக்கிழமை | 21.11.2024 | அதிர்வு 111

## இன்று இந்தியா பறக்கிறார் ரணில்



முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்று வியாழக்கிழமை காலை இந்தியாவுக்கு விஜயம் 07



# மாவீரர் வாரம் இன்று ஆரம்பம்

## தமிழர் தேசமெங்கும் உணர்வெழுச்சி நிகழ்வுகள்

**ஈழத் தமிழர்களின் உரிமைக்காகப் போராடி உயிர்நீத்த வீரமறவர்களை நினைவேந்தும் மாவீரர் வாரம் இன்று ஆரம்பமாகின்றது.**

**இந்த மாவீரர் வாரத்தின் இறுதி நாளான நவம்பர் 27ஆம் திகதி மாவீரர் நாளாக அனுஷ்டிக்கப்படுகின்றது.** 04

# முல்லைத்தீவில் கோர விபத்து! 2 இளைஞர்கள் பரிதாபச் சாவு!!



(எஸ்.நிதர்ஷன்)

முல்லைத்தீவு, மல்லாவி – வன்னிவிளாங்குளம் பகுதியில் நேற்று புதன்கிழமை மாலை இடம்பெற்ற விபத்தில் 2 இளைஞர்கள் உயிரிழந்துள்ளதுடன் மற்றுமொருவர் படுகாயமடைந்துள்ளார்.

மாங்குளத்திலிருந்து மல்லாவி நோக்கி வந்த 04




பொருளாதார நெருக்கடியில் இருந்து இலங்கையைப் பிணை எடுப்பதற்கான தனது உதவி திட்டத்தின் மூன்றாவது தவணைக் கொடுப்பனவு குறித்து இறுதி செய்வதற்காக சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழு ஒன்று இலங்கை வந்துள்ளமை தெரிந்ததே.

அக்குழு ஓரிரு தினங்களுக்கு முன்னர் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை கொழும்பில் அவரது பிளவர் வீதி அலுவலகத்தில் சந்தித்துப் பேசியது.

மிகக் கொந்தளிப்பான – இக்கட்டான – காலகட்டத்தில் பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கு ரணில் விக்கிரமசிங்கவின் தலைமைத்துவம் வழங்கிய அளப்பெரும் பணியை சர்வதேச நாணய நிதிய பிரதிநிதிகள் குழு விதந்துரைத்துப் பாராட்டியதாகத் தெரியவருகிறது.

“எங்கள் அனுபவ வரலாற்றில், இலங்கையில் நாம் எட்டியமையைப் போன்ற விதிவிலக்கான முன்னேற்றத்தை நாங்கள் 05








## தாய், சிசு மரணத்துக்கு நீதி கோரி

# மன்னார் வைத்தியசாலைக்கு முன் மக்கள் நேற்று பெரும் போராட்டம்!

(மன்னார் நிருபர்)

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் மகப் பேற்றுக்காக அனுமதிக்கப்பட்ட நிலையில் மரணம் அடைந்த தாய் மற்றும் சிசுவின் மரணத்திற்கு நீதி கோரி மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு முன்பாக நேற்று புதன்கிழமை மாலை 4.30 மணியளவில் ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் இரவு 8 மணியளவில் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது.

எனினும், இரண்டு அரசியல் கட்சிகளின் முன்னாள் நாடாளுமன்ற வேட்பாளர்கள் இருவர் மக்களின் போராட்டத்தைத் தமது அரசியல் நாடகமாக வழிநடத்திச் சென்ற நிலையில் அங்கு சலசலப்பு ஏற்பட்டது.

தாய் மற்றும் சிசுவின் மரணத்திற்கு நீதி வழங்க வேண்டும், தவறு செய்தவர்கள் கைது செய்யப்பட வேண்டும், வைத்திய சாலை நிர்வாகம் மாற்றப்பட வேண்டும் போன்ற பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து அமைதியான முறையில் போராட்டம் ஆரம்பமானது.

இதன்போது பல்வேறு கோஷங்கள் எழுப்பப்பட்ட நிலையில் வைத்தியசாலைக்குள் போராட்டக்காரர்கள் நுழைய முற்பட்ட நிலையில் கலவரம் ஏற்பட்டது. இதனைத் தொடர்ந்து பொலிஸாருக்கும் மக்களுக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டது .

இதன் காரணமாக கலகம் அடக்கும் பொலிஸாரும் விசேட அதிரடிப் படையினரும் வரவழைக்கப்பட்டனர்.

அதனைத் தொடர்ந்து சம்பவ இடத்திற்கு தந்த மன்னார் மாவட்ட அரச அதிபர் க.கனகேஸ்வரன் தலைமையிலான குழுவினர் இறந்த பெண்ணின் பெற்றோரிடம் கலந்துரையாடியபோதும் சுமுகமான நிலை ஏற்படவில்லை.

போராட்டக்காரர்கள் தொடர்ந்தும் கொட்டும் மழையில் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் முன் வீதியையும் மறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தநிலையில் மன்னார் மாவட்ட அரச அதிபர் தலைமையில் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மத்திய சுகாதார அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்பட்ட விசேட குழுவின் பிரதிநிதிகள் அடங்கலாக உயிரிழந்த பெண்ணின் தாய் மற்றும் உறவினர்கள், சட்டத்தரணிகள், மதத் தலைவர்களை உள்ளடக்கி விசேட கலந்துரையாடல் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடல் சுமார் 2 மணித்தியாலங்களுக்கு மேலாக இடம்பெற்றது. குறித்த கலந்துரையாடலின்போது மேற்படி பெண் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டது முதல் அவர் உயிரிழக்கும் வரை அங்கு நிகழ்ந்த சம்பவங்கள் தொடர்பில் உயிரிழந்த பெண்ணின் தாயார் குறித்த குழுவினரிடம் தெரிவித்தார்.

மேலும், இம் மரணங்களுக்கு உரிய தீர்வு கிடைக்க வேண்டும் என்ற கோரிக்கையை அவர் முன்வைத்தார்.

இதன்போது உயிரிழந்த பெண்ணின் உறவினர்கள் மற்றும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் என்று எழுத்து மூலம் வாக்குறுதி வழங்குமாறு குறித்த குழுவிடம் வேண்டுகோள் விடுத்தனர்.

இந்தநிலையில் மத்திய சுகாதார அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்பட்ட குழுவின் இரண்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையிலும், வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் தனது விசாரணைக் குழுவை நியமித்து மூன்று நாட்களில் தமது விசாரணையை முடிப்பதாகவும் வாக்குறுதி வழங்கினார்.

இந்த விடயங்களின் அடிப்படையில், சம்பந்தப்பட்ட வைத்தியர்கள் உள்ளடங்கலாக அனைவருக்கும் உரிய நடவடிக்கை எடுப்பதாக வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் எழுத்து மூலம் உத்தரவாதம் வழங்கினார்.

இந்த எழுத்துமூல உத்தரவாதத்தை ஏற்றுக்கொண்டு உயிரிழந்த பெண்ணின் தாய் மற்றும் உறவினர்கள் அங்கிருந்து சென்றனர்.

எனினும், இரண்டு அரசியல் கட்சிகளின் முன்னாள் நாடாளுமன்ற வேட்பாளர்கள் குறித்த எழுத்துமூல உத்தரவாதத்தை ஏற்றுக்கொள்ள முடியாது என்று மக்களைத் திசை திருப்பி தமது அரசியல் நாடகத்தை அரங்கேற்றினர்.

இதனால் அங்கு மக்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் தர்க்க நிலை ஏற்பட்டது. பொலிஸார், விசேட அதிரடிப் படை மற்றும் கலகம் அடக்கும் பொலிஸார் இணைந்து வைத்தியசாலைக்கு முன் வீதியை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டவர்களைப் பலவந்தமாக வெளியேற்றினர்.

இதனால் சில மணி நேரம் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலை பிரதான வீதியூடான போக்குவரத்து பாதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.














# மாவீரர்களின் பெற்றோர், உரித்துடையோர் கௌரவிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பெரியபரந்தன் வட்டாரக் கிளையினரின் ஏற்பாட்டில் அந்த வட்டாரத்துக்குட்பட்ட மாவீரர்களின் பெற்றோர் மற்றும் உரித்துடையோரைக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்று புதன்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாணம் – கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கலந்துகொண்டு மாவீரர்களின் பெற்றோர் மற்றும் உரித்துடையோரைக் கௌரவித்து உரையாற்றினார்.






















# உடுத்துறையில் மாணவர் நாடாளுமன்ற அமர்வு



யாழ். உடுத்துறை மகா வித்தியாலயத்தில் மாணவர் நாடாளுமன்ற அமர்வு நேற்று புதன்கிழமை நடைபெற்றது.

வித்தியாலய அதிபர் ந.தேவராஜா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வு நிலை அதிபர் அ.சா. அரியகுமார் கலந்துகொண்டார்.









## மாவீரர் வாரம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

1982 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27 ஆம் திகதி தமிழீழ விடுதலைப் புலிகளின் போராளியான லெப்.கேணல் சங்கர் முதல் வித்தாக வீரமரணமடைந்தார். அந்த நாளையே மாவீரர் நாளாக 1989 ஆம் ஆண்டு தமிழீழத் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனால் அறிவிக்கப்பட்டது. அன்றிலிருந்து ஒவ்வொரு ஆண்டும் இந்நாளில் தாயகத்திலும், புலம்பெயர் நாடுகளிலும் மாவீரர் நாள் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

மாவீரர் நாளை நினைவுகூரும் வகையில், நவம்பர் 21 ஆம் நாள் மாவீரர் வாரம் ஆரம்பமாகும். இந்நாட்களில் தமிழ் மக்களால் வணக்க நிகழ்வுகள் மேற்கொள்ளப்படும். இறுதி மாவீரர் நிகழ்வுகள் நவம்பர் 27 ஆம் திகதி நடைபெறும். அந்நாளில் தமிழ் மண்ணுக்காய் மரணித்த மாவீரர்களுக்கு அகவணக்கம் செலுத்தி ஈகைச்சுடர் ஏற்றுவர்.

பொதுவாக, தாயகத்தில் மாவீரர் வாரம் முழுவதும் மஞ்சள் சிவப்பு நிறக் கொடிகள் பறக்கவிட்டு, மாவீரர்களுக்கான பாடல்கள் ஒலிக்கவிட்டு துயிலும் இல்லங்களில் வணக்க நிகழ்வுகள் நடத்தப்படுவது வழக்கம். அதேபோல், புலம்பெயர் தேசங்களிலும் இவ்வகையான வணக்க நிகழ்வுகள் நடத்தப்படுகின்றன.

## முல்லைத்தீவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மோட்டார் சைக்கிளும் மல்லாவி பகுதியிலிருந்து மாங்குளம் நோக்கிச் சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதிக்கொண்டதாலேயே இந்த விபத்து சம்பவித்துள்ளது.

இதன்போது வன்னிவிளாங்குளம் பகுதியைச் சேர்ந்த சந்திரன் விதுசன் (வயது 20), மாங்குளம் – புதிய கொலணி பகுதியைச் சேர்ந்த விஜயகுமார் விதுர்சன் (வயது 20) ஆகிய இளைஞர்களே உயிரிழந்துள்ளனர்

இதேவேளை, சம்பவத்தில் படுகாயமடைந்த மாங்குளம் பகுதியைச் சேர்ந்த மற்றைய இளைஞர் மாங்குளம் ஆதார வைத்தியசாலை அம்புலன்ஸ் ஊடாக கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

உயிரிழந்த இருவரின் சடலங்களும் மாங்குளம் ஆதார வைத்தியசாலையில் இருந்து பிரேத பரிசோதனைக்காக முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளன.

இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை மாங்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.






# மீனவர்கள் எவரும் இன்றி நின்ற இந்திய விசைப் படகு

## 5 ஆம் தீடையில் இலங்கைக் கடற்படையினரால் மீட்பு

(ந.லோகதயாளன்)

5 ஆம் தீடையில் நின்ற இந்திய விசைப் படகு ஒன்றை இலங்கைக் கடற்படையினர் மீட்டு மன்னாருக்குக் கொண்டு வந்துள்ளனர்.

இந்தியாவின் இராமேஸ்வரம் மீனவர்களின் விசைப்படகு என நம்பப்படும் இந்தப் படகு இலங்கைக் கட்டுப்பாட்டில் உள்ள 5 தீடை அருகே மீனவர் எவரும் இன்றி நின்ற சமயமே நேற்று புதன்கிழமை இரவு கடற்படையினரால் மீட்கப்பட்டு மன்னார் இறங்குதுறைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

இந்தப் படகில் அதிக மீன்களும், எரிபொருளும் காணப்படுகின்றபடியால் இயந்திரக் கோளாறு காரணமாகத் தமிழக மீனவர்கள் படகைக் கைவிட்டுச் சென்றிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்றது.

கடற்படையினர் மீட்டு வந்த இந்தப் படகு மன்னார் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளது.



## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அரிதாகவே கண்டிருக்கிறோம். நாடு எதிர்பார்த்ததை விட வேகமாக ஸ்திரமடைந்தது. அதற்காக, உங்களின் கடுமையான மற்றும் கசப்பான பொருளாதார சீர்திருத்தங்களுக்கு நாங்கள் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்" என்று குறிப்பிட்ட ஒரு மூத்த பிரதிநிதி, விக்கிரமசிங்கவிடம் "துரதிர்ஷ்டவசமாக, நீங்கள் அதற்கான விலையைக் கொடுக்க வேண்டியிருந்தது." – என்று ரணில் விக்கிரமசிங்கவின் தேர்தல் தோல்வியைச் சூசகமாகச் சுட்டிக் கவலைப்பட்டார்.

ஆனால், விக்கிரமசிங்க, பதற்றமடையாமல், "விளைவுகளைப் பற்றி முழுமையாக அறிந்தே நான் இந்த வேலைத்திட்டத்தை ஆரம்பித்தேன். ஆயினும் இப்போது நான் அமைதியாக முழு திருப்தியுடன் இருக்கிறேன்" என்று வெளிப்படையாகப் பதிலளித்தார்.

இந்த விவகாரங்களில் ரணில் விக்கிரமசிங்கவின் கருத்து நிலைப்பாடு யாது என்பதை அறிவதற்கு தேர்தல் முடிந்து சில தினங்களுக்கு பின்னர் நடைபெற்ற ஒரு சந்திப்பின் விவரத்தை விவரிப்பது பொருத்தமாக இருக்கும் என நினைக்கிறேன்.

பொதுத்தேர்தல் முடிவுகள் வெளியாகி சில தினங்களுக்கு பின்னர் மஹிந்த ராஜபக்ஷவைச் சந்திப்பதற்கு கொழும்பில் அவரது விஜயராம மாவத்தை இல்லத்துக்கு ரணில் விக்கிரமசிங்க வந்திருந்தார்.

இரண்டு முன்னாள் ஜனாதிபதிகளும் அருகருகே அமர்ந்து குசேலம் விசாரித்துக் கொண்டனர்.

அடுத்து மஹிந்த ராஜபக்ஷ ஆரம்பித்தார்.

"ரணில் நிலைமை எப்படி உள்ளது?" என்று கேட்டார் மஹிந்தர்.

"ஒரு வருடத்திற்குக் கூட நிலைமை தாக்கு பிடிக்காது!" – என்று திட்டவட்டமாகவும் தெளிவாகவும் பதிலளித்தார் ரணில் விக்கிரமசிங்க.

தொடர்ந்து இருவரும் வேறு உதவியாளர்களின் பங்களிப்பின்றித் தனித்து சுமார் ஒரு மணி நேரம் தங்களுக்குள் மனம் விட்டுக் கலந்துரையாடினார் என்று அறிய வந்தது.

\+ + +

மதுபான சாலை உரிமம் வழங்கிய விவகாரம் சூடு பிடிக்க தொடங்கியுள்ளது. அது பற்றிய விடயங்களை வெளியிடுமாறு உத்தரவிடுதல் உட்பட பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்து கொழும்பு உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனு ஒன்று நேற்று தாக்கல் ஆகி உள்ளது.

எது, எப்படி என்றாலும் உண்மை விரைவில் அம்பலமாகும் என்று நம்பலாம்.




# 400 சொகுசு கார்கள் சட்டவிரோதமாக பதிவு செய்யப்பட்டு பாரிய நிதி மோசடி

## மோட்டார் திணைக்களத்தின் உயர் அதிகாரிகள் உட்பட 8 பேரை நீதிமன்றில் ஆஜராகுமாறு உத்தரவு

மோட்டார் திணைக்களத்தின் உயர் அதிகாரிகள் உட்பட 8 பேரை நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு கொழும்பு பிரதான நீதவான் திலின கமகே அறிவித்துள்ளார்.

இலங்கை சுங்கத்தால் அனுமதி பெறப்படாத சுமார் 400 சொகுசு கார்கள் போலியான முறையில் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்று குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இதன் காரணமாக அரசுக்கு 500 கோடி ரூபாவுக்கு மேல் நட்டம் ஏற்பட்டுள்ளது என்று நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவத்துடன் தொடர்புடைய அதிகாரிகளை எதிர்வரும் 29ஆம் திகதி நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு கொழும்பு பிரதான நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

# கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்த வாஸ்கொடகாம அதிசொகுசு கப்பல்




வாஸ்கொடகாம என்ற அதிசொகுசு கப்பலொன்று நேற்று கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள இந்த கப்பலில் 689 சுற்றுலாப் பயணிகளும் 460 பணியாளர்களும் வருகை தந்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜேர்மன், பிரித்தானியா மற்றும் இந்தியா உள்ளிட்ட நாடுகளில் உள்ள சுற்றுலாப் பயணிகள் இந்த கப்பலில் வருகை தந்துள்ளனர்.

# வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை – 2024

“குடிமக்கள் செய்யக்கூடிய சிறிய பணிகளே பெரிய மாற்றங்களை உண்டுபண்ணும். என்னால் செய்யக்கூடிய சிறிய பணி மரங்களை நடுவது தான்.”

**- வங்காரி மாதாய்**
**(அமைதிக்கான நோபல் விருது பெற்ற கென்யாவின் பசுமைப் போராளி)**






# கஞ்சிப்பானை இம்ரானின் முன்னாள் சகா பருத்தித்துறை நீதிமன்றத்தில் முன்னிலை

பிரபல பாதாள உலகத் தலைவன் கஞ்சிப்பானை இம்ரானின் முன்னாள் சகாவான தமிழ் இளைஞர் ஒருவர் பருத்தித்துறை நீதிமன்றத்தில் நேற்று முற்படுத்தப்பட்டதை அடுத்து நீதிமன்ற வளாகம் உள்ளிட்ட பகுதிகளில் விசேட பாதுகாப்பு போட்டப்பட்டிருந்தது.

பருத்தித்துறை பொலிஸாரால் கடந்த மே மாதம் 30 ஆம் திகதி ஹெரோயின் போதைப் பொருளுடன் குறித்த வடமராட்சியை சேர்ந்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டு மே 31 ஆம் திகதி பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டதை அடுத்து விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

மேற்படி சந்தேக நபர், தான் பாதாள உலகக் குழுவின் தலைவன் கஞ்சிப்பானை இம்ரானின் முன்னாள் சகா எனவும், அவருடன் ஏற்பட்ட கருத்து முரண்பாடு காரணமாக பிரிந்து பூக்குடி கண்ணா என்பவருடன் இணைந்து செயற்பட்டு வந்ததாகவும், கஞ்சிப்பானை இம்ரானின் தந்தை மீது தாக்குதல் நடத்திவிட்டு தப்பித்து யாழ்ப்பாணத்தில் தலைமறைவாகி இருந்ததாகவும் யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த காலத்தில் பொலிசாரிடம் தெரிவித்துள்ளார்.

## விசேட பாதுகாப்பு

அத்துடன், மேற்குறித்த சம்பவங்களின் பின்னணியில் தனது உயிருக்கு ஆபத்து இருப்பதாகவும் அவர் தெரிவித்ததை அடுத்து விசேட அதிரடிப்படையினர், பொலிசார் இணைந்து பலத்த பாதுகாப்புடன் பருத்தித்துறை நீதிமன்றத்திற்கு நேற்று பகல் 12 மணியளவில் அழைத்து வரப்பட்டிருந்தார்.

இதையடுத்து பருத்தித்துறை நீதிமன்ற வளாகம் உள்ளிட்ட அண்மித்த பகுதிகள் விசேட பாதுகாப்பின் கீழ் கொண்டு வரப்படந்தன. நீதிமன்ற வளாகத்திற்குள் சென்றவர்கள் அத்தனைபேரும் உடல் சோதனைக்கு உள்ளாக்கப்பட்டே அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

இவ்வாறு மேற்படி சந்தேக நபர் பருத்தித்துறை நீதிமன்ற நீதவான் கிருஷாந்தன் பொன்னுத்துரை முன்னிலையில் முற்படுத்தப்பட்ட போது வழக்கை விசாரித்த நீதவான் எதிர்வரும் டிசம்பர் 04 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கட்டளை பிறப்பித்தார்.






## இன்று இந்தியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மேற்கொள்ளவுள்ளார் என்று தெரிவித்துள்ளார்.

இந்த விஜயத்தின்போது ரணில் விக்கிரமசிங்க மத்திய இந்தியாவில் உள்ள ஸ்ரீ சத்ய ஸ்ரீ வித்யா விஹார் உயர் கல்வி நிறுவனத்தில் விரிவுரை ஒன்றையும் நடத்தவுள்ளார்.

இந்த அமர்வு நாளை வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு உயர்கல்வி நிறுவன மாணவர்கள் மற்றும் பெற்றோர்களின் பங்குபற்றுதலுடன் நடைபெறவுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி ரணில் எதிர்வரும் 30ஆம் திகதி நாடு திரும்பவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## ஜே.வி.பிக்குக் கிட்டிய ஆதரவு

அடுத்து, அடுத்து இடம்பெற்ற இரண்டு தேர்தல்களில் ஜே.வி.பியையும் உள்ளடக்கிய தேசிய மக்கள் சக்தி வெற்றியீட்டி இருக்கின்றது.

ஜனாதிபதித் தேர்தலில் இரண்டாவது சுற்று வாக்கு எண்ணிக்கையின் பின்னரே அத்தரப்புக்கு வெற்றி உறுதியானது. ஆனால் அதன் பின் இரண்டு மாதத்துக்குள் நடைபெற்ற பொதுத்தேர்தலில் இலங்கையின் சரித்திரத்தில் முன்னரெப்போதும் இல்லாத விதத்தில் மூன்றில் இரண்டுக்கும் அதிகமான பலத்துடன் பெருவெற்றியை அத்தரப்புக்கு இலங்கை மக்கள் வழங்கி இருக்கிறார்கள்.

அது மாத்திரமல்ல, முதல் தடவையாக தென்னிலங்கை அரசியல் தலைமை ஒன்று சிறுபான்மை மக்களின் அரசியல் தரப்புகளுடன் உடன்பாடு - இணக்கம் - எதுவும் காணாமல் தனித்து நின்று, தமிழர்களின் தாயகப் பகுதியில் - குறிப்பாக வடக்கில் - வெற்றியீட்டி - முன்னணிக்கு வந்திருக்கின்றது.

சுதந்திர இலங்கையின் கடந்த 75 ஆண்டு கால சரித்திரத்தில் இல்லாத புதிய விடயம் இது.

இந்த வெற்றிக்கு அடிப்படையான காரணம் அக்கட்சியும் அதன் தலைமையும் செயலில் காட்டிய விடயங்கள் அல்ல. அவை வாய் மூலம் - பிரசாரங்கள் வாயிலாக - அளித்த உறுதிமொழிகள் மட்டும்தான்.

அதாவது, இந்த விடயங்களில் ஏனைய பல்வேறு தரப்புக்களின் மீது ஏற்பட்ட அதிருப்தி - சீற்றம் - கோபம் - ஏமாற்றம் - ஆதங்கம் போன்றவை தேசிய மக்கள் சக்திக்கு வாக்குகளாகத் திரும்பி இருக்கின்றன.

அதாவது, இதுவரை அதிகாரத்திலோ, மக்களின் பிரதிநிதித்துவப் பதவிகளிலோ இருந்தவர்களின் மீது ஏற்பட்ட அதிருப்தி, தேசிய மக்கள் சக்திக்கு வாய்ப்பான அரசியல் சூழலைத் தந்திருக்கின்றது. தேசிய மக்கள் சக்தியின் நடவடிக்கைகள், செயற்பாடுகள் போன்றவற்றில் ஏற்பட்ட திருப்தியால் கிடைத்த வெற்றி இது என்று கூறுவதற்கு இடமில்லை.

பிற தரப்புக்கள் மீதான அதிருப்தி, இந்தத் தரப்பாவது நல்லது செய்யாதா என்று ஆதங்கத்தில் ஆதரவை திரட்டித் தந்திருக்கிறது என்பதுதான் உண்மை.

தங்களுடைய உரிமைக்காக - கௌரவ வாழ்வுக்காக - இருப்பியலுக்காக - லட்சத்திற்கும் அதிகமான உயிர்களைக் காவு கொடுத்து, சுதந்திர வேட்கையோடு போராடிய தமிழினம் கூட ஜே.வி.பியையும் உள்ளடக்கிய தேசிய மக்கள் சக்திக்கு இந்த முறை கணிசமான அளவுக்கு வாக்களித்து இருக்கின்றது.

தமிழர்களுடைய உரிமைப் போராட்டத்தை இனவாதத்தில் அணுகி, அதற்கு எதிராகப் பேரினவாத கூச்சலைக் கிளப்பிய ஜே.வி.பியின் 15 வருடங்களுக்கு முந்திய உண்மையான கோர முகத்தை - பேரினவாதக் கொடூரப் போக்கை - மறந்து விட்டுத்தான் - தமிழர்கள் இம்முறை அத்தரப்பும் உள்ளடங்கிய தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்திருக்கிறார்கள் என்பது தவறுதலாக நடந்த ஒரு விடயம் அல்ல. தெரிந்து கொண்டே தமிழர்கள் இப்படி வாக்களித்திருக்கிறார்கள் தென்னிலங்கையில் மாறி மாறி பேரினவாதம் பேசும் தரப்புக்கள் மத்தியில் இருந்து இவர்களாவது திருந்தி வந்து நியாயம் செய்ய மாட்டார்களா என்று எதிர்பார்ப்பில் - ஆதங்கத்தில் - வழங்கப்பட்ட வாக்குகளே இவை என்பதை ஆட்சித் தரப்பு மறந்து விடக்கூடாது.

2002இல் தமிழர் தரப்போடு தென்னிலங்கை அரசு முன்னெடுத்த சமரச முயற்சிகளை - சமாதான எத்தனங்களை - பேரினவாதக் கொடூர முகத்தை காட்டியபடி எதிர்த்துப் போராடி சீரழித்தவர்கள்தான் இந்த ஜே.வி.பி. தரப்பினர் என்பது தமிழருக்கு நன்கு தெரியும்.

எண்பதுகளின் பிற்பகுதியில் இந்தியத் தரப்பின் தலையீட்டோடு தமிழர்களுக்கு அதிகாரபகிர்வு அளிக்க இலங்கை அரசு நிர்ப்பந்திக்கப்பட்ட போது இப்போதைய தேசிய மக்கள் சக்தியின் முக்கிய தலைவர்கள் உட்பட்ட ஜே.வி.பியினர்தான் ஆயுதமேந்தி, அதற்கு எதிராக வன்முறை உருக் கொண்டு போராடினார்கள் என்பதையும் தமிழர்கள் மறந்து விடவில்லை.

இப்போதைய புதிய அரசுத் தலைமை மீது நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் முன்வைத்து, அவர்களுக்கு ஒரு வாய்ப்பு அளிக்கும் விதத்தில் சிறுபான்மையினரான தமிழர்கள் ஒரு சந்தர்ப்பத்தை தந்திருக்கிறார்கள். அதை பயன்படுத்திப் பிராயச்சித்தம் செய்வதும் அல்லது தன்னுடைய வழமையான சுயரூபத்தை - கோர முகத்தை - கொடூரப் பேரினவாத அணுகுமுறையை - வெளிப்படுத்தி அந்த நம்பிக்கையை சிதறடித்து, கிட்டிய வாய்ப்பை நாசமாக்குவதும் ஆட்சித் தலைமையின் தீர்மானத்தை பொறுத்தது. என்ன செய்யப் போகின்றது அநுர குமார திஸநாயக்க தலைமையிலான ஆட்சிப்பீடம்?

# தஞ்சாவூரில் வகுப்பறைக்குள் ஆசிரியை ஒருவர் படுகொலை

தமிழகம் தஞ்சாவூரில் வகுப்பறைக்குள் ஆசிரியை ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ள சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

தஞ்சாவூர் மாவட்டம், மல்லிப்பட்டிணம் வட்டம், சின்ன மனையைச் சேர்ந்த முத்து என்பவரின் மகள் ரமணி (வயது 26). இவர் மல்லிப்பட்டிணம் அரசு உயர்நிலைப்பள்ளியில் கடந்த 4 மாதங்களுக்கு முன்பு பணியில் சேர்ந்து பணியாற்றி வந்தார்.

இந்த நிலையில், சின்னமனையைச் சேர்ந்த பன்னீர் செல்வம் மதன் (வயது 30). இவருக்கு அவரது பெற்றோர்கள் திருமணம் செய்ய முடிவு செய்தனர். இதைத்தொடர்ந்து, மதன் குடும்பத்தினர், ரமணியை பெண் கேட்டு அவரது வீட்டிற்குச் சென்றனர். ஆனால், மதனைப் பிடிக்கவில்லை என ரமணி கூறியுள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

இதனால் ஆத்திரமடைந்த மதன், நேற்று காலை ரமணி பணியாற்றி வந்த பாடசாலைக்குச் சென்றுள்ளார். அங்கு வகுப்பறைக்குள் மாணவர்களுக்கு பாடம் நடத்திக் கொண்டிருந்த ரமணியின் கழுத்தில் கத்தியால் சரமாரியாகக் குத்தியுள்ளார். இதனையறிந்த மாணவர்கள் அலறி அடித்து வகுப்பறையை விட்டு வெளியில் ஓடி வருவதையறிந்த மற்ற ஆசிரியர்கள், அந்த வகுப்பறைக்குள் சென்று பார்த்த போது ரத்த வெள்ளத்தில் ரமணி கிடந்துள்ளார்.



இதையடுத்து, அவர்கள், ரமணியை பட்டுக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். எனினும், அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டார் என மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக சேதுபாவசத்திரம் பொலிஸார் வழக்குப் பதிந்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். மேலும், தப்பியோடிய மதனை பொலிஸார் தேடி வருகின்றனர்.

இந்தச் சம்பவம் அந்தப் பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.





# தமிழக மீனவர் படகுகளை இலங்கை கடற்படை பயன்படுத்துவதைத் தடுத்து நிறுத்து வேண்டும்

## டி.டி.வி. தினகரன் எதிர்ப்பு

“தமிழக மீனவர்களின் படகுகளை இலங்கை கடற்படை பயன்படுத்துவதற்கான அனுமதியை அந்நாட்டு அரசு வழங்கியிருப்பது ஒட்டுமொத்த தமிழக மீனவர்கள் மத்தியிலும் கடும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது. தமிழக மீனவர்களின் வாழ்வாதாரத்தை அடியோடு சிதைக்கும் இலங்கை அரசின் முடிவை ஆரம்ப நிலையிலேயே மத்திய, மாநில அரசுகள் தடுத்து நிறுத்து வேண்டும்”

– இவ்வாறு .அம.மு.க. பொதுச் செயலாளர் டி.டி.வி. தினகரன் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் தனது எக்ஸ் தளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில்,

“தமிழக மீனவர்களை கைது செய்யும் இலங்கை கடற்படை, அவர்களின் மீன்பிடி படகுகளையும் பறிமுதல் செய்து தொடர் அட்டூழியத்தில் ஈடுபட்டு வரும் நிலையில், பறிமுதல் செய்யப்பட்ட தமிழக மீனவர்களின் படகுகளை இலங்கை கடற்படை பயன்படுத்துவதற்கான அனுமதியை அந்நாட்டு அரசு வழங்கியிருப்பதாக வெளியாகியிருக்கும் செய்திகள் மிகுந்த அதிர்ச்சியளிக்கின்றன.

வாழ்வாதாரத்துக்காக கடலுக்குச் செல்லும் தமிழக மீனவர்களை அத்துமீறி கைது செய்வது, அவர்களின் படகுகளை பறிமுதல் செய்து தாங்க முடியாத அளவுக்கு அபராதம் விதிப்பது, அபராதம் செலுத்த தவறினால் சிறையில் அடைத்து கொடுமைப்படுத்துவது என இலங்கை அரசின் மனித உரிமை மீறல் சம்பவங்கள் தொடர்கதையாகி வருவது கடும் கண்டனத்துக்குரியது.

இந்நிலையில், எல்லை தாண்டியதாக கூறி பறிமுதல் செய்யப்படும் தமிழக மீனவர்களின் படகுகளை இலங்கை கடற்படை பயன்படுத்துவதற்கான அனுமதியை அந்நாட்டு அரசு வழங்கியிருப்பது ஒட்டுமொத்த தமிழக மீனவர்கள் மத்தியிலும் கடும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

தமிழக மீனவர்களின் வாழ்வாதாரத்தை அடியோடு சிதைக்கும் இலங்கை அரசின் முடிவை ஆரம்ப நிலையிலேயே தடுத்து நிறுத்துவதோடு, இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் நூற்றுக்கும் அதிகமான மீனவர்களையும், பறிமுதல் செய்யப்பட்டிருக்கும் படகுகளையும் முழுமையாக மீட்கத் தேவையான நடவடிக்கைகளை மத்திய மாநில அரசுகள் மேற்கொள்ள வேண்டும்.”

என்று வலியுறுத்தியுள்ளார்.

# தி.மு.க. ஆட்சியில் கொலை என்பது சர்வசாதாரணம் தஞ்சை ஆசிரியை கொலைக்கு இ.பி.எஸ். கண்டனம்



"தஞ்சையில் அரச பாடசாலை ஆசிரியை கொலை செய்யப்பட்ட சம்பவம் அதிர்ச்சியளிக்கிறது. தி.மு.க. ஆட்சியில் கொலை என்பது சர்வ சாதாரணம் என்ற அவல நிலை வரும் அளவுக்கு நிர்வாகத் திறனற்ற தி.மு.க. அரசு சட்டம் ஒழுங்கைக் காக்கத் தவறியுள்ளது."

– இவ்வாறு அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.


இதுதொடர்பாக அவர் தனது எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

"தஞ்சை மாவட்டம் மல்லிப்பட்டினம் அரசு மேல்நிலைப் பள்ளியில் ஆசிரியை ரமணி கத்தியால் குத்திக் கொலை செய்யப்பட்டுள்ளார் என வரும் செய்தி அதிர்ச்சியளிக்கிறது. அவரது குடும்பத்தாருக்கு எனது ஆழ்ந்த இரங்கல். தி.மு.க. ஆட்சியில் கொலை என்பது சர்வசாதாரணம் என்ற அவல நிலை வரும் அளவுக்கு நிர்வாகத் திறனற்ற தி.மு.க. அரசு சட்டம் ஒழுங்கைக் காக்கத் தவறியுள்ளது.

அரச பாடசாலை ஆசிரியர்கள், அரசு மருத்துவர்கள் உள்ளிட்ட அரசு ஊழியர்களுக்கு, அவர்கள் பணிபுரியும் அரசுக்கு சொந்தமான இடங்களில் கூட பாதுகாப்பு துளியும் இல்லாத அளவுக்கு சட்டம் ஒழுங்கை சீர்குலைத்துள்ள தி.மு.க. அரசுக்கு எனது கடும் கண்டனம். ஆசிரியர் ரமணியின் கொலை குற்றவாளி மீது உரிய சட்ட நடவடிக்கை எடுப்பதுடன், தி.மு.க. முதல்வர் வெறும் விளம்பரங்களில் மட்டுமே செலுத்தும் கவனத்தை, தன்னுடைய முதல் பணியான சட்டம் ஒழுங்கைக் காப்பதில் இனியாவது செலுத்த வலியுறுத்துகிறேன்," என்று குறிப்பிட்டுள்ளார்.

# உக்ரைனுக்கு கண்ணிவெடிகளை வழங்குவதற்கு பைடன் ஒப்புதல்



உக்ரைனுக்கு கண்ணிவெடிகளை வழங்குவதற்கு அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் ஒப்புக் கொண்டுள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

இராணுவ அதிகாரி ஒருவரை மேற்கோள்காட்டி பி.பி.சி. இந்த தகவல்களை வெளிப்படுத்தியுள்ளது.

இதன்படி, விரைவில் உக்ரைனுக்கு கண்ணிவெடிகள் அனுப்பப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அதேநேரம் அதிக மக்கள் தொகையைக் கொண்ட பகுதிகளில் மேற்படி கண்ணிவெடிகளைப் பயன்படுத்தக் கூடாது என்பதில் உக்ரைன் உறுதியாகயுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

உக்ரைனின் கிழக்குப் பகுதியில் முன்னேறி வரும் ரஷ்யப் படையினரைக் கட்டுப்படுத்துவதற்காக இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படுகிறது.

இது போன்ற ஆயுதங்களைப் பயன்படுத்துவது பொது மக்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தும் என்ற அடிப்படையில் ஜனாதிபதி ஜோ பைடன் தலைமையிலான அரசாங்கம் இது தொடர்பான ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவதைக் கடந்த



காலங்களில் தடுத்திருந்தது.

எனினும் அமெரிக்காவின் ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் ஜனவரி 20ஆம் திகதி வெள்ளை மாளிகைக்குச் செல்வதற்கு முன்னர் உக்ரைனின் போர் முயற்சியை வலுப்படுத்துவதற்கு தற்போதைய அமெரிக்க அரசாங்கம் முயல்வதாகத் தெரிவிக்கப்படுகிறது



# அணு ஆயுதங்களை பயன்படுத்த புடின் ஒப்புதல்: ரஷ்யா - உக்ரைன் போர் மேலும் தீவிரமடைகிறது



உக்ரைன் மீதான போரில் அணு ஆயுதங்களை பயன்படுத்த ரஷ்ய ஜனாதிபதி புடின் ஒப்புதல் அளித்துள்ளார்.

ரஷ்யா – உக்ரைன் போர் தொடங்கி 1,000 நாள்கள் நிறைவடைந்துள்ள நிலையில், இந்த போரில் அணு ஆயுதங்களை பயன்படுத்துவது தொடர்பான புதிய கொள்கையில் புடின் நேற்று ம் உந்தினம் கையெழுத்திட்டுள்ளார்.

ரஷ்யா – உக்ரைன் இடையில் கடந்த 2022 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் போர் தொடங்கியது. இந்த போர் தொடங்கி நேற்று முன்தினம் 1,000 நாள்கள் நிறைவடைந்துள்ளது. ரஷ்யாவின் தாக்குதலால் உக்ரைனில் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்துள்ளனர். நாட்டின் அடிப்படை உள்கட்டமைப்பு தகர்ந்துள்ளது.

இதனிடையே, ரஷ்யா மீது தாக்குதல் நடத்த உக்ரைனுக்கு அமெரிக்கா உட்பட மேற்கத்திய நாடுகள் இராணுவ உதவி வழங்கி வந்தன. நீண்ட தூரம் சென்று இலக்குகளை துல்லியமாக தாக்கும் ஏவுகணைகளை உக்ரைனுக்கு அமெரிக்கா வழங்கி இருந்தது. எனினும், இந்த ஏவுகணைகளைப் பயன்படுத்த கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தன.

தற்போது அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனின் பதவிக் காலம் முடிவடைய உள்ளது. இந்நிலையில், தாங்கள் வழங்கிய நீண்ட தூரம் சென்று தாக்கும் ஏவுகணைகளை பயன்படுத்த உக்ரைனுக்கு பைடன் அனுமதி வழங்கியுள்ளார். இந்த ஏவுகணைகளை உக்ரைன் பயன்படுத்தும்பட்சத்தில் ரஷ்யாவுக்கு தீவிர பாதிப்பு ஏற்படும். இந்த சூழலில், உக்ரைனுக்கு எதிரான போரில் அணு ஆயுதங்களைப் பயன்படுத்த ரஷ்யா முடிவு செய்துள்ளது.

இதற்கேற்ப தன் அணு ஆயுதக் கொள்கையில் ரஷ்யா மாற்றம் கொண்டு வந்துள்ளது. இதன்படி, அணு ஆயுதம் இல்லாத நாடு (உக்ரைன்), அணு ஆயுதம் வைத்திருக்கும் நாட்டுடன் (அமெரிக்கா) கூட்டணி வைத்து ரஷ்யா மீது போர் தாக்குதல் மேற்கொண்டால், பதிலுக்கு அந்நாட்டின் மீது ரஷ்யாவும் அணு ஆயுதங்களைப் பயன்படுத்தும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, பாலிஸ்டிக் ஏவுகணை உட்பட நவீன ஏவுகணைகள், ட்ரோன்கள் மூலம் ரஷ்யா மீது வான்வழித் தாக்குதல் மேற்கொள்ளப்படும்பட்சத்தில், பதிலுக்கு அணு ஆயுதங்களைப் பயன்படுத்த நேரிடும் என்று ரஷ்யா எச்சரித்துள்ளது. இது தொடர்பான ஆவணங்களில் ரஷ்ய ஜனாதிபதி புடின் நேற்று முன்தினம் கையெழுத்திட்டுள்ளார்.

இது குறித்து ரஷ்ய ஜனாதிபதி மாளிகையின் செய்தித் தொடர்பாளர் கூறுகையில்,

“தற்போதைய சூழ்நிலைக்கு ஏற்ப எங்களது அணு ஆயுதக் கொள்கைகளில் மாற்றம் கொண்டு வருவது முக்கியம். அணு ஆயுதங்களை தவிர்ப்பதற்கான வழிகளையே நாங்கள் பார்க்கிறோம். ஆனால், அவற்றை பயன்படுத்த வேண்டிய சூழ்நிலைக்கு தள்ளப்பட்டால், எங்களுக்கு வேறு வழியில்லை. நாங்கள் அணு ஆயுதங்களைப் பயன்படுத்த நேரிடும். அணு ஆயுதம் இல்லாத நாடு அணு ஆயுதம் வைத்திருக்கும் நாட்டுடன் இணைந்து போரில் ஈடுபட்டால் அது கூட்டு தாக்குதலாகவே கருதப்படும்” என்று தெரிவித்துள்ளார்.

மேற்கத்திய நாடுகள் உக்ரைனுக்கு உதவுவதை நிறுத்த வேண்டும் என்று புடின் தொடர்ந்து எச்சரித்து வந்தார். எனினும், மேற்கத்திய நாடுகள் உக்ரைனுக்கு இராணுவ உதவிகளை வழங்கி வந்தன. அமெரிக்கா மற்றும் நேட்டோ நாடுகள், தாங்கள் வழங்கிய நீண்ட தூரம் சென்று தாக்கும் ஏவுகணையை பயன்படுத்த உக்ரனைக்கு அனுமதி வழங்கினால், ரஷ்யா மற்றும் நேட்டோ இடையிலான போராக அது மாறும் என்று புடின் எச்சரித்திருந்தார். மேலும், அணு ஆயுத பயன்பாட்டுக் கொள்கையில் மாற்றம் கொண்டுவரப் போவதாக ரஷ்யா கூறி வந்தது. கடந்த செப்டம்பர் மாதத்தில் சில மாற்றங்கள் செய்யப்பட்டன.

இந்நிலையில், தற்போது உக்ரைனுக்கு எதிரான போரில் அணு ஆயுதங்களைப் பயன்படுத்தும் வகையில் திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளது. ரஷ்யாவின் இந்த அறிவிப்பு காரணமாக, ரஷ்யா – உக்ரைன் போர் தீவிரமடையும் சூழல் உருவாகியுள்ளது.



# மன அழுத்தமில்லா கல்வி வழங்க அர்ப்பணிப்புடன் செயற்படுவேன்

## பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவிப்பு

எதிர்வரும் மறுமலர்ச்சி யுகத்திற்கு ஏற்ற பிரஜைளை உருவாக்கக்கூடிய, மன அழுத்தமில்லாத கல்விக்காக மாணவர்களின் நம்பகத்தன்மையை நிலைநாட்ட அர்ப்பணிப்புடன் செயற்படவுள்ளேன் என பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

புதிய அரசாங்கத்தின் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சில் நேற்று தனது அமைச்சுப் பதவியைப் பொறுப்பேற்றுக்கொண்ட போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்.

“கல்வி போன்றதொரு விடயத்துடன் தொடர்புடைய அமைச்சுப் பதவியை ஏற்றுக்கொள்வதில் மகிழ்ச்சியடை-கிறேன்.

புதிய அரசின் கொள்கைகளின்படி, கல்விக்கு அதிக முன்னுரிமை அளிக்கப்பட்டு, பாடசாலைக் கல்வியானது முறையாகவும் கால ஒழுங்கிலும் வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட வேண்டும்.

மாணவர்கள் மகிழ்ச்சியுடன் கல்வி கற்கும் சூழல் உருவாக்கப்பட வேண்டும்.

தற்போது கல்வித்துறையில் நிலவும் பிரச்சினைகள் விரைவில் தீர்க்கப்பட வேண்டும்.” – என்றார்.









# தென்கிழக்கு வங்காள விரிகுடாவில் குறைந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம்

தென்கிழக்கு வங்காள விரிகுடாவை அண்மித்து எதிர் வரும் 23 ஆம் திகதி குறைந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் உருவாகலாம் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த குறைந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் அடுத்த இரு நாட்களில் காற்றழுத்த தாழ்வு மண்டலமாக உருவா கலாம் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள் ளது.

இது தொடர்பில் கடற்றொழிலாளர்கள் மற்றும் வடக்கு, கிழக்கு மாகாண மக்களை அவதானமாக இருக்குமாறு வளிமண்லவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும், மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களின் சில இடங்களில் இன்று 100 மில்லி மீற்றருக்கும் அதிகமான பலத்த மழை பெய்யக்கூடும் எனவும் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

மேலும், வடக்கு, வடமத்திய மற்றும் கிழக்கு மாகா ணங்களில் 75 மில்லி மீற்றருக்கும் அதிகமான மழை பெய்யக்கூடும்.

மின்னல் தாக்கங்களால் ஏற்படும் ஆபத்துகளைக் குறைத்துக் கொள்ளத் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

# இந்திய மீனவர்கள் 12 பேர் நிபந்தனைகளுடன் விடுதலை

பருத்தித்துறை கடற்பரப்பில் எல்லை தாண்டி எல்லை தாண்டி மீன்பிடித்த குற்றச்சாட்டில் கைதாகிய 12 இந்திய மீனவர்களையும், நிபந்தனைகளுடன் விடுதலை செய்து பருத்தித்துறை நீதவான் உத்தரவிட்டுள்ளதுடன், கடற்படை யினர் மீது தாக்குதல் நடத்திய வழக்கில் விளக்கமறியலை நீடித்தும் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

கடந்த நவம்பர் 12 ஆம் திகதி அதிகாலை பருத்தித் துறை கடற்பரப்பில் வைத்து எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 12 இந்திய மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்து விசாரணையின் பின்னர் நீரியல்வளத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர்.

இதனையடுத்து அன்றைய தினமே அவர்கள் பருத்தித் துறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட போது நேற்றைய தினம் வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் கிருசாந்தன் பொன்னுத்துரை உத்தரவிட்டிருந்தார்.

இதையடுத்து குறித்த 12 மீனவர்களும் நேற்று திங்கட் கிழமை காலை பருத்தித்துறை நீதவான் முன்னிலையில் முற்படுத்தப்பட்டிருந்தனர்.

இந்திய மீனவர்களுக்கு எதிராக நீரியல்வளத் துறை அதிகாரிகளால் குற்றப் பத்திரம் தாக்கல் செய்யப்பட் டது.

இதனடிப்படையில் 18 மாதகால சாதாரண சிறைத் தண்டனை விதித்து அதனை 10 வருடங்களுக்கு ஒத்தி



வைத்து நிபந்தனையுடன் விடுவித்தும், படகு உரிமையாளர் மற்றும் படகோட்டி ஆகிய இருவருக்கும் எதிரான வழக்கு களை பின் தவணையிடப்பட்டும் நீதவான் உத்தரவிட்டுள் ளார்.

இதேவேளை, கைது நடவடிக்கையின் போது கடற் படையினர் மீது தாக்குதல் நடத்தப்பட்டமை தொடர்பில் குறித்த மீனவர்களுக்கு எதிராக பருத்தித்துறை பொலிஸா ரினால் வழக்கு பதிவு செய்யப்பட்டு குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

மேற்படி வழக்கினை விசாரித்த பருத்தித்துறை நீதவான் 12 மீனவர்களையும் எதிர்வரும் 27 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைத்து உத்தரவிட்டிருந்தார்.



# யாழ். மாவட்ட புலம்பெயர் தொழிலாளர் சங்கம் உருவாக்குதல் தொடர்பான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம் மாவட்ட புலம்பெயர் தொழிலாளர் சங்கம் உருவாக்குதல் தொடர்பான கலந்துரையாடல் மாவட்ட அரச அதிபரும் மாவட்ட செயலாளருமான மருதலிங்கம் பிரதீபனின் தலைமையில் மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் கருத்துத் தெரிவித்த மாவட்ட அரச அதிபர், ஏற்கனவே கிராம ரீதியாக தெரிவு செய்யப்பட்ட 70 புலம்பெயர் தொழிலாளர் சங்கங்கள் காணப்படுகின்றன எனவும், அதன் வெளிப்பாடாக மாவட்ட மட்டத்தில் புலம்பெயர் தொழிலாளர் சங்கம் உருவாக்குதலை நோக்கமாகக் கொண்டு இந்தக் கலந்துரையாடல் நடைபெறுகின்றது எனவும் தெரிவித்தார்.

மேலும் வெளிநாடுகளுக்குச் செல்வோர் அதிகமாகக் காணப்படுகின்றது எனவும், உத்தியோகபூர்வமாக அடையாளப்படுத்தல் குறைவாகவே உள்ளது எனவும், இதன் நோக்கத்தைச் சரியான முறையில் அடையாளப்படுத்தி நலன்சார் விடயங்களைச் செயற்படுத்துவதற்குப் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் இணைக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவித்தார்.

புதிதாக உருவாக்கப்பட்ட யாழ்ப்பாணம் மாவட்ட புலம்பெயர் தொழிலாளர் சங்கத்துக்குத் தனது வாழ்த்துக்களையும் மாவட்ட அரச அதிபர் இதன்போது தெரிவித்தார்'

இந்தக் கலந்துரையாடலில் உதவி மாவட்ட செயலாளர், மாவட்ட வெளிநாட்டு வேலைவாய்ப்பு அபிவிருத்தி உத்தியோத்தர், பிரதேச செயலக வெளிநாட்டு வேலைவாய்ப்பு அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலக புலம்பெயர் தொழிலாளர் சங்கத்தின் தலைவர் மற்றும் செயலாளர், வெளிநாட்டில் வேலை செய்பவர்களின் குடும்ப உறுப்பினர்கள், வெளிநாடுகளிலிருந்து திரும்பி வந்தவர்கள், வெளிநாடு செல்லவுள்ள நபர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.









# தனிமையில் இருந்த சுவிஸ் நாட்டுப் பெண்மணியை தாக்கி இரண்டு கோடி 42 லட்சம் ரூபா கொள்ளை!

## மட்டக்களப்பு கல்லடியில் நேற்று அதிகாலை நடந்த கொடூரம்

(கனகராசா சரவணன்)

காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள கலட்டிப் பிரதேசத்தில் வீட்டில் தனிமையில் தங்கியிருந்த சுவிஸ் நாட்டு பிரஜையான பெண் ஒருவரின் வீட்டின் கதவவை நேற்றுப் புதன்கிழமை அதிகாலை 12.00 மணியளவில் உடைத்து உள்நுழைந்த கொள்ளையன் பெண்ணை கடுமையாக தாக்கிவிட்டு அங்கிருந்து இரண்டு கோடி 40 லட்சம் ரூபா வெளிநாட்டு நாணயங்கள் மற்றும் ஒன்றேகால் பவுண் சங்கிலி, 29 ஆயிரம் ரூபா இலங்கைப் பணம் என்பவற்றைக் கொள்ளையிட்டுத் தப்பி ஓடியுள்ளான் எனக் காத்தான்குடிப் பொலிஸார் தெரிவித்தனர் .

இது பற்றித் தெரியவருவதாவது:-

கல்லடி பேபிசிங்கம் வீதியைச் சேர்ந்த 62 வயதுடைய சுப்பையாபிள்ளை கோணேஸ்வரி 1990 ஆம் ஆண்டு குடும்பத்துடன் இடம்பெயர்ந்து சுவிஸ் நாட்டுக்குச் சென்ற குடியேறினார். அவர் அங்கு தாதியாகவும், கணவன் பொறியலாளராகவும், மகள் விஞ்ஞானியாகவும் பணியாற்றி வருகின்றனர். அவர் தாதியர் சேவையில் இருந்து ஓய்வு பெற்றுள்ள நிலையில் இலங்கையிலுள்ள தனது வீட்டை பார்ப்பதற்காக இலங்கைக்கு திரும்பி வீட்டில் தற்காலிகமாகத் தனிமையில் தங்கியிருந்துள்ளார்.

இந்த நிலையில் நேற்று அதிகாலை 12 மணியளவில் வீட்டின் குளியலறைப் பகுதி ஜன்னல் கதவை உடைத்து உள்நுழைந்த கொள்ளையன் குறித்த பெண்ணை சரமாரியாக தாக்கிவிட்டு அங்கிருந்த அலுமாரியை உடைத்து 72 ஆயிரம் ஸ்விஸ் பிராங் (இலங்கை நாணயப்படி இரண்டு கோடி 40 லட்சம் ரூபா) மற்றும் ஒன்றேகால் பவுண் தங்க சங்கிலி, 29 ரூபாய் ஆயிரம் ரூபா இலங்கை நாணயம் என்பவற்றை கொள்ளையிட்டு தப்பி ஓடியுள்ளான் எனப் பொலிஸாரின் ஆரம்பக் கட்டவிசாரணையில் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து சம்பவ இடத்துக்கு காத்தான்குடி பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பொறுப்பதிகார சப்இன்பெஸ்டர் .ஏ. எம்.எஸ்.ஏ.றஹீம் தலைமையில சென்ற பொலிஸார் தடயவியல் பிரிவு மற்றும் மோப்பநாயை வரவழைத்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# அரிசி இறக்குமதி செய்ய அமைச்சரவை அங்கீகாரம்



சுமார் 70,000 மெட்ரிக் தொன் அரிசி தொகையை இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக வர்த்தக, வாணிப, உணவு பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் இடம்பெற்றுவரும் செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அதற்கமைய, எதிர்வரும் டிசம்பர் 15 ஆம் திகதிக்கு முன்னர் குறித்த அரிசி தொகையை அரச வர்த்தக கூட்டுத்தாபனம் ஊடாக இறக்குமதி செய்து சதொச விற்பனை நிலையங்கள் மூலம் விநியோகிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தற்போது, சந்தையில் நிலவும் அரிசி பற்றாக்குறைக்கு தீர்வு வழங்கும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.




**திருமிகு எம்.ஏ. சுமந்திரன் அவர்களுக்கு,**
**ஜனாதிபதி சட்டத்தரணி,**
**முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்,**
**கொழும்பு.**

அன்புச் சகோதரருக்கு,

உற்சாகமாய் இருப்பீர்கள் என்று நம்புகிறேன். தேர்தலில் தோற்ற நிலையில், உற்சாகமாய் இருக்கிறீர்களா? எனக் கேட்டு, உங்களை நான் கிண்டல் செய்வதாகச் சிலர் நினைக்கலாம். உங்களை நன்கு அறிந்தவன் என்ற வகையில், இத் தோல்வியால், நீங்கள் உற்சாகப்பட்டிருப்பீர்கள் என்று நான் திடமாக நம்புகிறேன். ஒரு "முட்டாள்" இனத்தின் பிரதிநிதியாய் இருந்து, இவ்வளவு காலமும் "நிர்வாகப் பாரம்" சுமந்து நின்ற நீங்கள், இப்போது அப் பாரம் நீங்க, உற்சாகமடைவதில் என்ன வியப்பிருக்கப் போகிறது?

முதல்நாள் இரவில் ஆட்சிப் பொறுப்பைக் கொடுத்து, மறுநாளே, "காட்டுக்குப் போ!" என்று கைகேயி உத்தரவிட்டபோது, பாரமேற்றிய வண்டியிலிருந்து கழற்றி விடப்பட்ட எருதொன்று, தன் தோள்ப் பாரம் நீங்கிய மகிழ்ச்சியில் உடல் சிலிர்த்துச் சென்றாற் போல, இராமன் சென்றானாம் என்கிறார் கம்பர். உங்கள் நிலையும் அதுவாகத்தான் இருக்குமென உறுதியாய் நம்புகிறேன்.

"மாட்டேன்! மாட்டேன்!" என்று நீங்கள் மறுத்து நிற்கவும், ஆற்றலும், அறிவும் மிகுந்த ஒருவர் கட்சிக்குத் தேவை என்பதை உணர்ந்து, சம்பந்தன் ஐயா கூட்டமைப்புக்குள் உங்களை வலியக் கொண்டு வந்தார். அன்று தொட்டு, சம்பந்தன் ஐயா பெயருக்குத் தலைவராக இருக்க, கட்சியை நீங்கள் தான் வழி நடத்தி வந்தீர்கள்.

புலிகளின் கட்டாயத்தின் பேரில் தான் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. இது பரகசியமான இரகசியம்! அவர்களது முன் மொழிதலை வழிமொழியாது இருக்கும் துணிவு அப்போது எவருக்கும் இருக்கவில்லை. அதனால் தமிழரசுக் கட்சியோடு மற்றைய கட்சிகளும் ஒன்றாக்கப்பட்டன. பொருந்தாக் கல்யாணம் எனத் தெரிந்திருந்தும் வேறு வழியின்றித் தமிழரசுக்கட்சி மணவறையில் உட்காரவேண்டி வந்தது.

உங்கள் கட்சியின் வீட்டுச் சின்னம் கூட்டமைப்பின் தேர்தல்ச் சின்னமாக ஏற்றுக் கொள்ளப்பட்டதிலிருந்து இணைப்பாளர்கள் தமிழரசுக்கட்சிக்குத் தந்த முதன்மையை நம்மினம் அறிந்து கொண்டது. ஆனால், ஒன்றிணைந்தவர்கள் அதனைத் தெரிந்து கொள்ளாதவர்கள் போல, தமக்கான சமவுரிமை வேண்டத் தலைப்பட்டனர்.

"நீ பொரி கொண்டு வா, நான் உமி கொண்டு வருகிறேன். இருவரும் ஊதி ஊதித் தின்னலாம்" என்றால், உமி வைத்திருப்பவனுக்கு உவப்பு உண்டாதல் இயல்பு தானே! வன்முறையிலிருந்து மென்முறைக்குத் தள்ளப்பட்டவர்களும், சுயநலத்தோடு மென்முறை வழி நின்றவர்களும், கூட்டமைப்பில், இந்த உவப்போடு தான் தமிழரசுக்கட்சியுடன் ஒட்டிக் கொண்டனர்.

புலிகளின் மறைவு வரையும், அடங்கிக் கிடந்த அக்கூட்டுக் கட்சியினர், இடைக்காலத்தில் வாய்த்த பாராளுமன்றப் பதவிச் சுகத்தை இழக்க விரும்பாது, புலிகளின் மறைவின் பின்னர், தமிழரசுக் கட்சியின் தோளில் ஏறி உட்கார்ந்து, தம்மைப் பலப்படுத்த நினைந்தனர்.

அந்நிலையில் தான், அவர்களைக் கையாளவும், போரால் பாதிக்கப்பட்ட இனத்தைக் காவல் செய்யவுமாக தனக்கு ஓர் தக்க துணை தேவை என நினைந்த சம்பந்தனார், உங்களைத் தமிழரசுக் கட்சிக்குள் கைபிடித்து இழுத்து வந்தார்.

தான் செய்ய நினைந்த பல விடயங்களை உங்களைக் கொண்டு செய்வித்துப் பயன்பெற்றுக் கொண்ட அவர், பிரச்சினைகள் வந்த போதெல்லாம், போலிச் சாமியார் போலக் கண் மூடியிருக்க, அப் பிரச்சினைகளுக்குத் துணிவாய் முகங்கொடுத்து. அதனால் வந்த பாதிப்புகளின் பலிக்கடாவாக உங்களை நீங்களே ஆக்கிக் கொண்டீர்கள்.

இவ் உண்மையை அனைவரும் அறிந்திருந்தார்கள். ஆனாலும் அனுபவமும், மூப்பும், தலைமைப் பதவியும் சம்பந்தனாரைக் காவல் செய்ய, அவர்மேல் காட்ட முடியாத தமது கோபத்தை, கூட்டணிக் கட்சியினர் உங்கள் மேல் காட்டத் தொடங்கினார்கள்.

பின்னாளில், வடக்கு மாகாணசபை முதலமைச்சர் பதவிக்காக, முன்னாள் நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் அவர்களையும், சம்பந்தனார், உங்களைப் போலவே வலிய அழைத்து வந்தபோது தான், உங்கள் கட்சிக்குச் "சனி" பிடிக்கத் தொடங்கியது. ஒரு நீதவான் எந்த நீதிக்கும் கட்டுப்படாமல், தன் சுயநல வளர்ச்சிக்காக, கட்சிக்குள் "சூது" விளையாடத் தொடங்கினார்.

உங்களின் காவலால், கூட்டமைப்புக்குள் தமது அதிகாரத்தைச் செலுத்தமுடியாமல் தத்தளித்து நின்ற ஆயுதக் கட்சிகளுக்கு, அவரது சூழ்ச்சிகள் மிகவும் பிடித்துப் போக, தாம் செய்ய வேண்டிய வேலைகளை, அவர் செய்கிறாரே என மகிழ்ந்து, அவரைத் தங்களின் தலைவராய் உலகிற்குக் காட்டி, தமிழரசுக் கட்சியின் பலத்தைச் சிதைக்க நினைந்த அவர்கள், இரகசியமான முறையில், தனிமையான அறையில், இரவோடு இரவாக "தமிழ் மக்கள் பேரவை"யை உருவாக்கினார்கள். "அலிபாவும் நாற்பது திருடர்களும்" கதையை இங்கு நாம் மீளப் படித்தோம்.

தொடர்ச்சி▼

தொடர்ச்சி▲

அந் நேரத்தில் எல்லாம் துணிந்து நின்று, தமிழரசுக்கட்சியைத் தாங்கள் தான் காவல் செய்தீர்கள். நாளடைவில் பொறுப்பற்ற பொய்யரான முதலமைச்சரை நம்பி, மாற்றணியினர் வெளியேற முற்பட்ட போது, அவர்களைத் துணிவோடு வழியனுப்பி வைத்தவர் தாங்கள் தான்.

அப்போதெல்லாம் தமிழரசுக்கட்சியில் இன்று உரிமை பாராட்டும் பலரும் வாய்மூடி நின்றமையை நம் இனம் அறியும்.

தாம் அமைத்த கூட்டணியால் பலம் பெருகும் என நினைந்து, கூட்டமைப்பிலிருந்து பிரிந்து சென்ற மாற்றணியினர், தமது கூட்டு, மக்கள் மத்தியில் உறுதியாகும் என, கனவு கண்டிருந்த நிலையில், நடந்து முடிந்த தேர்தல் அவர்களின் கனவைப் பகற் கனவாக்கியிருக்கிறது.

"தாங்கள் தான் தமிழரசுக்கட்சியின் பலம்" என்றாற் போல வித்தை காட்டிக் கொண்டிருந்த கூட்டமைப்பின் மாற்றணியினரினுள், அடைக்கலநாதனையும், கஜேந்திரகுமாரையும் தவிர மற்றையோர் தேர்தலின் முடிவு கண்டு மண்கவ்வி, மனம் உடைந்து நிற்கின்றார்கள். இப்போது யார் பலத்தில், யார் வாழ்ந்தார்கள் என்ற உண்மை, அனைவருக்கும் தெரிந்து விட்டது.

இந்த உண்மையை, உலகறிய தெரியச் செய்தது தான் உங்களின் குற்றமாம். 2015 தேர்தலில் கூட்டமைப்புக்கு மக்கள் வழங்கிய பதினாறு சீற்றுகள், மேற்ச்சொன்னவர்களும் உள்ளிருந்த சில புல்லுருவிகளும் விளைவித்த உட்பகையால், 2020 இல் ஆறாக மாற, இம்முறை ஒட்டாத அவர்களில் பலரை வெட்டிவிட்டு, தனித்து நின்று தமிழரசுக்கட்சி எட்டு இடங்களைக் கைப்பற்றி, தனது பலத்தை நிரூபித்திருக்கிறது.

கட்சியின் பலத்தை வெளிக்காட்டச் செய்த நீங்கள் குற்றவாளியாம்!. சிலர் சொல்லுகிறார்கள். தான் சார்ந்த கட்சியின் பெருமையை உலகிற்கு உணர்த்திய உங்களின் செயல், எப்படிக் குற்றமாகும் என்று தெரியவில்லை.

தேர்தலின் பின்னான ஊடகச் சந்திப்பின் போது, உங்களது தோல்வி பற்றிய கவலை சிறிதுமின்றி, கட்சியின் வெற்றி பற்றி நீங்கள் உரைத்த போது, உங்கள் மீதான மதிப்பு அதிகமானது.

கூட்டணிக் கட்சிகளோடு ஒற்றுமை பேணவில்லை என்பதுதான் உங்களின்மேல் முதன்முதலில் எழுந்த குற்றச்சாட்டு. பலவீனமாக இருந்து கொண்டு பலங் காட்டப் புறப்பட்ட கூட்டணிக் கட்சிகள் மீது, அப்போது யாரும் குற்றம் சொன்னதாய்த் தெரியவில்லை. அப்படியே விட்டிருந்தால் பலத்தை பலயீனம் விழுங்கியிருக்கும். தடுத்தவர் நீங்கள்! பொய்மைக்குத்தான் எங்களிற் பலர் ஆதரவளிக்க முன்வருகிறார்கள். இம்முறை தேர்தலில் நீங்கள் செய்தது சரி என்று நிரூபித்து, இன்று ஆளுமையாய் தலைநிமிர்ந்து நிற்கிறீர்கள்.

தமிழரசுக் கட்சியின் "கோடரிக் காம்பொன்றைத்" தலைமையாக்கி, அவரின் கீழ் மற்றைய அணியினர் ஒன்று சேர்ந்து, பூட்டிய அறையில் இரகசியமாகக் கூட்டம் போட்ட பொழுது, இது தவறென்று சொல்லத் துணிவில்லாதவர்கள் தான், "சுமந்திரன் தான் ஒற்றுமையைச் சிதைத்தார்" என்று, இன்று குற்றஞ்சாட்டி நிற்கிறார்கள். யாழ் தமிழர்களின் தராசு, சமநிலை சிதைந்து நிற்கிறது.

இன்று யாழ் தமிழ் மக்கள், உங்களைத் தோற்கடித்திருக்கிறார்கள். "தமிழ்மக்களின் ஒற்றுமையைக் குழைத்தவர்" என்றும், "இனத்துரோகி" என்றும், "புலிகளின் பகைவன்" என்றும், "அரசாங்கத்தின் வால்பிடி" என்றும் பலவிதமான குற்றச்சாட்டுகள் உங்களின் மேல் அடுக்கப்பட்டன. "டயஸ்போராக்கள்", "இராஜதந்திரம் அறியாதவர்கள்", "தீர்க்கதரிசனம் அற்றவர்கள்" என, பலராலும் இக் குற்றச்சாட்டுகள் திட்டமிட்டு உங்கள் மேல் திணிக்கப்பட்டன.

மேற்சொன்னவர்களின் கைப்பொம்மைகளாகி இந் நாட்டின் இளையோர் பலர் கூட, ஆராய்வின்றித் தாங்களும் அதனை வழிமொழியத் தலைப்பட்டார்கள்.

அவர்களைக் கொண்டு "சுத்துமாத்துச் சுமந்திரன்" என உங்களுக்குப் பட்டம்சூட்டுவித்து, உங்கள் மீதான வெறுப்பை அப்பாவி மனிதர்களின் உள்ளத்தில், திட்டமிட்டு ஆழப் பதித்தார்கள் அக்கயவர்கள்.

உங்களை நம் இனத்திலிருந்து ஒதுக்கிவிட வேண்டும் என விரும்பியவர்களில் முக்கியமானவர்கள் அந்த "டயஸ்போராக்கள்" தான். போர் பாதிப்பைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி, வெளிநாடுகளில் சென்று ஒளிந்து பணந்தேடிய அவர்கள், இன்று தமிழர்களின் பாராளுமன்றப் பதவிகளையும், அப்பணத்தைக் கொண்டு தமதாக்கிக் கொள்ள விரும்புகின்றார்கள் "ஈனப்பிறவிகள்",

தமது பொருட்பலத்தால், கட்சிக்குள் சிலரை விலைக்கு வாங்கியும், ஊடகங்கள் பலவற்றைத் தமதாக்கிக் கொண்டும், உங்களுக்கெதிராகச் செய்த பிரச்சாரங்கள் மிகப் பெரியன. தனித்து நின்ற "அபிமன்யுவை", 'சக்கரவியூகம்' அமைத்து அழித்த துரியோதனர்கள் போலத்தான், அவர்களின் செயல் அமைந்து போயிற்று.

ஆனாலும் நீங்கள் தோற்கவில்லை என்றுதான் நான் சொல்வேன். இத்தனைபேர் சேர்ந்து தனி ஒருவரான உங்களைத் தாக்கியும், பதினைந்தாயிரத்திற்கு மேற்பட்டவர்கள் உங்கள் மீதான நம்பிக்கையை, தேர்தலில் பதிவு செய்திருக்கிறார்கள். இனத்தை அடகு வைத்து, உங்களை விட அதிக வாக்குப் பெற்று, வெற்றி பெற்றவர்களோடு ஒப்பிடுகையில், இத்தனை பேரின் எதிர்ப்பையும் தாண்டி நீங்கள் பெற்ற வெற்றி, என்னைப் பிரமிக்க வைக்கின்றது.

வெளிநாடுகளுக்குச் சென்றும், உள்நாட்டில் நின்றும், புலிப்போர்வை போர்த்தி, "தமிழ்த் தேசியம்" என்கின்ற "பொய்மானிற்குப்" பின்னால், மக்களை மயக்கி ஓடச் செய்த பின், வெற்றி எனும் "சீதையை", ஏமாற்றிக் கைப்பற்றியிருப்பவர்களோடு ஒப்பிடுகையில், நீங்கள் பெற்றதே, உண்மை வெற்றி என நினைக்கத் தோன்றுகிறது.

பெரும்பான்மை பெற்று வென்றிருக்கும் ஜே.வி.பி. அணி, விரைவில் அரசியல் சட்டத்தில் மாற்றம் கொண்டுவரப் போகிறதாம். அவர்கள் கொண்டுவரப் போகும் மாற்றங்கள், தமிழருக்குச் சார்பானவையா? இல்லையா? என அறிவதற்கும், மாறான சட்டங்கள் அறிமுகப்படுத்தப்படுமானால், அதனை நீதிமன்றில் எதிர் கொண்டு வெல்வதற்கும் தமிழரசுக் கட்சியில் தற்போது பலபேர் இருக்கிறார்கள் போல. அதனால் தான், நம் இனம் உங்களை நிராகரித்திருக்கிறதோ? சிரிப்புத் தான் வருகிறது!

கட்சியில் யாரும் இல்லாவிட்டால் என்ன? தமது "ஆபத்பாந்தவர்" எனக் கருதி, இருபத்தி எண்ணாயிரம் வரையிலான வாக்குகளை அள்ளிக் கொடுத்து, தமிழ் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் டாக்டர் அருச்சுனாவும், அவரின் சட்டந்தெரிந்த "தங்கமும்" இருக்கவே இருக்கிறார்கள். அவர்கள், அப் பிரச்சினையைக் கையாண்டு விட்டுப் போகட்டும்.

அதுபற்றி நீங்கள் அதிகம் கவலைப்பட வேண்டாம்! தயைகூர்ந்து, நீங்கள் சற்று அமைதியாக ஓய்வெடுங்கள். வெகுவிரைவில் அத்தனை பேரும் உங்கள் காலில் வந்து விழப் போகிறார்கள்.

அப்போது நீங்கள் இயங்கினால் போதும். காலம் உங்களைப் பல்லக்கில் ஏற்றிச் சுமந்து, கம்பீரமாய் மீண்டும் அழைத்து வரப்போகும் நாட்கள் வெகு தூரத்தில் இல்லை.

சகோதரா! உங்களுக்குப் பழைய வரலாறொன்றினை நினைவூட்ட விரும்புகிறேன். இந்தியப் பிரதமராய்ப் பதவியேற்று, சாதனைகள் பல புரிந்த இந்திராகாந்தி அம்மையார், அவசரகாலச் சட்டத்தால் பின்னாளில் பதவி இறக்கப்பட்டார். 1977 ஆம் ஆண்டு நடந்த தேர்தலில், தன் சொந்தத் தொகுதியிலேயே அவர் தோற்கடிக்கப்பட்டார். பல மூத்த தலைவர்கள்

தொடர்ச்சி▼

தொடர்ச்சி▲

ஒன்றிணைந்து, அவரை எதிர்த்து, "ஜனதாக் கட்சியின்" அரசை நிறுவினர். அவர்கள்,இந்திராகாந்தியைப் பாராளுமன்ற வளாகத்தினுள் சிறைவைக்கவும் தவறவில்லை. நிகழ்ந்த தோல்வியால், அம்மையாரைக் காங்கிரஸ் கட்சியே புறந்தள்ள முனைந்தது. அதனால், காங்கிரஸ் கட்சி பிளவுபட்டு, "இந்திரா காங்கிரஸ் கட்சி" ஆரம்பிக்கப்பட்டது. எதற்கும் அசராமல் தனியொருவராய் நின்று, அனைவரையும் எதிர்கொண்டார் அவ்வம்மையார்.

மூன்று ஆண்டுகளுக்குமேல், "ஜனதாக் கட்சியால்", நின்றுபிடிக்க முடியாமற் போயிற்று. 1980 இல் நடந்த தேர்தலில் மாபெரும் வெற்றி பெற்று, அம்மையார் மீண்டும் ஆட்சியைத் தனதாக்கினார். இடையில் ஏற்பட்ட தோல்வியால், அவரின் புகழ் பன்மடங்கு உயர்ந்தது.

அக் காலத்தில், நான் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தேன். அவ்வம்மையார் மீது எனக்கு மிகப் பெரிய ஈடுபாடு இருந்தது. அப்போது தமிழ் நாட்டில் வெளிவந்து கொண்டிருந்த, 'குமுதம்' சஞ்சிகையின் ஆசிரியராக, எஸ்.ஏ.பி.அண்ணாமலை அவர்கள் பணியாற்றினார். எதிர்காலத்தைக் கணிக்கும் ஆற்றல் மிக்க எழுத்தாளர் அவர். 1977 இல் அம்மையார் தோல்வியுற்ற போது, அத் தோல்வியைப் பலரும் கொண்டாடி மகிழ்ந்த வேளையில், அவர், ஓர் ஆசிரியத் தலையங்கம் எழுதினார்.

அத் தலையங்கத்தில், "மகளே! இம் மண்ணுக்காய் உழைத்த நீ சற்று ஓய்வெடு! பின்னர், முன்னரைவிட வேகத்தோடு இந் நாட்டைக் காக்க, மீண்டும் புறப்பட்டு வா! என்பதுபோல எழுதியிருந்தார். இப்போதும் அது என் ஞாபகத்தில் இருக்கிறது. நண்பரே! உங்களுக்கும் அதே வார்த்தைகளைப் பரிசளிக்க் விரும்புகிறேன். "ஓய்வெடுங்கள்! பின்னர், உற்சாகத்தோடு நம்மினம் காக்கப் புறப்பட்டு வாருங்கள்! உங்களை நமது இனம் வரவேற்கப் போகும் காலம் அதிக தூரத்தில் இல்லை. அப்போது உங்களது செயலும், எனது எழுத்தும் அனைவராலும் ஒருமித்து அங்கீகரிக்கப்படும். காத்திருக்கின்றேன்".

# முஸ்லிம் மக்களின் உணர்வுகளைப் புரியாது இந்த அரசு செயற்படுவது கவலையளிக்கிறது!

## இம்ரான் எம்.பி. தெரிவிப்பு



(ஹஸ்பர் ஏ.எச்.)

இந்த அரசு முஸ்லிம் மக்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளாது செயற்படுவது மிகவும் கவலை தருகின்றது என்று திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் தெரிவித்தார்.

ஊடகங்களுக்கு நேற்றுக் (19)கருத்து தெரிவித்துள்ள அவர் மேலும் கூறியதாவது,

முஸ்லிம் மக்களும் இந்த நாட்டின் பிரஜைகள். அந்த வகையில் இந்த சமூகமும் ஏனைய சமுகங்களைப் போன்று கௌரவத்துடன் இந்த நாட்டில் வாழ விரும்புகின்றது. இந்த நாட்டின் சுதந்திர காலம் தொட்டு நியமிக்கப்பட்டு வந்த அமைச்சரவையில் முஸ்லிம் மக்களின் பிரதிநிதித்துவம் இருந்து வந்துள்ளது.

இலங்கை அரசியல் வரலாற்றில் முதற்தடவையாக இந்த அரசு நியமித்த அமைச்சரவையில் முஸ்லிம் சமுகத்தின் பிரதிநிதித்துவம் இல்லாமல் புறக்கணிக்கப்பட்டுள்ளது. இதனால் நாடு முழுவதும் உள்ள முஸ்லிம் சமுகம் மிகுந்த கவலை கொண்டுள்ளது. சமுக வலைத்தளங்களை அவதானிக்கின்ற போது இதனைப் புரிந்து கொள்ள முடிகின்றது.

இந்த அரசின் கடந்த குறுகிய கால செயற்பாடுகள் சிலவற்றை பார்க்கும் போது முஸ்லிம்கள் தொடர்பான வித்தியாசமான எண்ணம் இந்த அரசுக்கு இருக்கின்றதோ என்ற சந்தேகம் எனக்கு ஏற்பட்டுள்ளது.

இலங்கையில் முஸ்லிம் மக்கள் பெரும்பான்மையாக வாழ்கின்ற கிழக்கு மாகாணத்தில் அந்த மாகாண ஆளுநரால் நியமிக்கப்பட்ட 6 தவிசாளர் பதவிகளில் எந்தவொரு முஸ்லிம் தவிசாளரும் நியமிக்கப்படவில்லை. இந்த விடயம் பேசு பொருளான பின்னர் ஒரு முஸ்லிம் தவிசாளர் நியமிக்கப்பட்டுள்ளார்.

அதேபோல இந்த அரசுக்குக் கிடைக்கப்பெற்ற 18 தேசியப் பட்டியல் ஆசனங்கள் தொடர்பான பெயர்ப் பட்டியல் முன்னர் வெளியிடப்பட்டபோது எந்தவொரு முஸ்லிம் உறுப்பினரதும் பெயரும் வெளிவரவில்லை. பின்னர் இதுவும் பேசுபொருளான பின்னர் ஒரு முஸ்லிம் உறுப்பினரது பெயரோடு புதிய பட்டியல் வெளியானது.

அந்த வரிசையிலேயே இப்போது இந்த அரசு நியமித்துள்ள அமைச்சரவையில் இலங்கை வரலாற்றில் முதற்தடவையாக முஸ்லிம் பிரதிநிதித்துவம் இல்லாது செய்யப்பட்டுள்ளது. முஸ்லிம்களுக்கு எதிரான இனத்துவேசத்தை விதைத்து ஆட்சிக்கு வந்த கோட்டபாய ராஜபக்ஷ அரசின் அமைச்சரவையில் கூட முஸ்லிம் பிரதிநிதித்துவம் இருந்தது என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது.

இந்த உதாரணங்களை வைத்து நோக்கும் போது இந்த அரசுக்கு முஸ்லிம்கள் தொடர்பான வித்தியாசமான எண்ணம் இருப்பது போலவே எனக்குத் தோன்றுகின்றது. இப்படியிருந்தால் இந்த ஆரம்பத்திலேயே இது களையப்பட வேண்டும். இந்த அரசோடு இணைந்திருக்கும் முஸ்லிம்கள் இந்தப் பணியைச் செய்ய வேண்டும்.

நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் நாடளாவிய ரீதியில் அளிக்கப்பட்டுள்ள சுமார் 15 லட்சம் முஸ்லிம் வாக்குகளுள் சுமார் 10 லட்சம் முஸ்லிம் வாக்குகள் திசைகாட்டிக்கு அளிக்கப்பட்டுள்ளது. நாடு முழுவதும் அளிக்கப்பட்டுள்ள வாக்கு விவரங்களை நுணுகி ஆராய்கின்ற போது இந்த உண்மையை விளங்கிக் கொள்ளலாம்.

முஸ்லிம்களின் இந்தளவு பெரிய எண்ணிக்கை வாக்குகளைக் கொடுத்து உருவாக்கப்பட்ட இந்த அரசு முஸ்லிம் மக்களின் உணர்வுகளையும் புரிந்து செயற்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.- என்றார்.

# கிழக்கு மாகாண இலக்கிய விழா ஒத்திவைப்பு



( வி.ரி. சகாதேவராஜா)

இன்று வியாழக்கிழமை திருகோண மலையில் நடைபெறவிருந்த கிழக்கு மாகாண இலக்கிய விழா தவிர்க்க முடியாத காரணங்களால் பிற்போடப் படுகின்றது என்று கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் சரவணமுத்து நவநீதன் தெரிவித்தார்.

புதிய திகதி பற்றி ஓரிரு தினங்க ளில் அறிவிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

தகவல்கள் உரிய கலைஞர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

# “கற்பகச்சோலை” பனை நடுகைத் திட்டம் புலிகளின் காலத்தைப் போல் இப்போதும்

## பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் தகவல்




தமிழீழ விடுதலைப் புலிகளின் காலத் தில் நடைமுறையில் இருந்த "கற்பகச் சோலை" பனை நடுகைத் திட்டத்தினை மீள ஆரம்பித்து பனை வளத்தை மேம்படுத்த உள்ளதாக பனை அபிவிருத் திச் சபையின் தலைவர் விநாயகமூர்த்தி சகாதேவன் தெரிவித்தார்.

யாழ் ஊடக அமையத்தில் நடாத் திய ஊடக சந்திப்பின் போதே அவர் இவ் வாறு தெரிவித்தார். இதன் போது மேலும் தெரிவிக்கையில் –

தமிழர்களுக்கும் பனை மரத்திற்கும் இலங்கை தீவிற்குள் ஒரே நிலை தான் காணப்படுகின்றது. இலங்கையை விட தென் கிழக்காசிய நாட்டில் பின் னர் உருப்பெற்ற பனைவளம் இன்று அந்தப் பிராந்தியத்தில் உயர் வளமாக உள்ளது.

எமது நாட்டிற்கே உரித்தான பனை வளம் மேம்படுத்தபட வேண்டிய தேவை உள்ளது. இதன் அடிப்படையில் கார்த் திகை மாதம் புனிதமான வாரம் மர நடுகை மாதமாக இது காணப்படுகிறது. தமிழ் மக்கள் இந்த காலத்தில் பனை மரத்தினை நடுகை செய்ய வேண்டும்.

யுத்தகாலத்தில் விடுதலைப் புலிக ளின் பொருண்மியத் துறையினால் கற்பகச்சோலை எனும் திட்டத்தின் கீழ் 2010 ஆம் ஆண்டு 10 கோடி பனை மரங்களை நாட்டும் திட்டத்தின் கீழ் பனம் விதைகள் நாட்டப்பட்டன.

அந்த காலத்தில் நாட்டப்பட்ட பனை மரங்கள் பல இன்று பயன்தரு நிலைக்கு வந்திருந்தாலும் – பல கோடிக்கணக்கான பனை மரங்கள் யுத்த காலத்திலும் யுத்தத்தின் பின்னரும் அபிவிருத்தி நோக்கிலும் அழிக்கபட்டு வந்துள்ளன..

ஆகவே எமது பனை அபிவிருத்தி சபை கடந்த காலத்தில் விட்ட தவறுக ளின் நிமித்தம் அதற்கான நிதி பனைமர நடுகைக்காக காணப்படவில்லை. இன்று தன்னார்வமாக பலர் பனை மரங்களை நாட்டிவருகின்றனர்.

இதனடிப்படையில் குறித்த செயற் திட்டங்களை நாம் ஊக்குவிக்க வேண் டும். இந்த நடுகையில் ஈடுபடுபவர்களை நாம் ஊக்குவிக்கும் முகமாக நாம் தொழில் நுட்ப உதவி உட்பட கௌரவிப்புக்களை யும் மேற்கொள்ள உள்ளோம்.

இதனடிப்படையில் இந்த மரநடுகை மாதத்தில் கற்பகச்சோலை திட்டத்தை மீள உருவாக்கி கடந்த காலத்தில் செய்யப்பட்டவர்களுக்கு “பனை காவலர்” என்ற விருதினையும் வழங்கவுள்ளோம். பாடசாலை மாணவர்களுக்கு “கற்பக செல்வம்“ என்ற திட்டமும் ஊடகவியலா ளர்களுக்கு “கற்பக ஓலைத் திட்டம்“ இளைஞர்களுக்கான “பனை வீரர்கள் திட்டம்“ மேலும் பனை ஏற்றுமதியா ளர்களுக்கு சந்திப்பு ஒன்றினையும் முன்னெடுக்கவுள்ளோம்.

இன்றைய காலகட்டத்தில் பனை மரக் கணக்கெடுப்பின் பொழுது இளம் பனைமரங்கள் தவிர்கபடுவதும் வெட்டி அழிக்கபடுவதும் வழமையாக உள்ளது. டிஜிட்டல் கணக்கெடுப்பு முறையினை முன்னெடுக்கவுள்ளோம். பனை வெட்டுவதற்கான முறை என்பது அதனை மீள் நடுகை செய்யும் ஒன்றாக அமைய வேண்டும். பனை சம்பந்தமான கண்டுபிடிப்பாளர்களை ஊக்குவிப்ப தோடு அவர்களுக்காக எமது பனை ஆராய்ச்சி மையம் திறந்துள்ளது. மேலும் திக்கம், வரணி, சங்கானையில் உள்ள வடிசாலைகள் மீள கூட்டுறவாளர்க ளுக்கு வழங்கி உற்பத்தி நடவடிக்கை களை முன்னெடுக்கவுள்ளோம். கள் உற்பத்தி நிலையங்களில் பதனிவடுதற்கு மீள அனுமதிகளை வழங்கவுள்ளோம். தென்பகுதியில் இருந்து தென்னங்கு இங்கு வந்து விற்பனையாவதை தடுப்ப தற்கு நடவடிக்கை ஏற்படுத்தவுள்ளோம்.

மேலும் கள்ளுற்பத்திக்கான தொழில் தகைமை சான்றிதழை வழங்கி பாடத் திட்டத்தினை ஆரம்பிக்கவுள்ளோம். மேலும் கோழித்தீவனம் மற்றும் கால்நடைதீவன இறக்குமதியை கட்டுப் படுத்த பனை உற்பத்தியின் மூலம் வெற்றிகண்டுள்ளோம். பனை ஆடை உற்பத்தி, உயிரியல் முறை மின் சார உற்பத்தி மற்றும் கூட்டுறவுடன் இணைந்து நாம் செயற்பட்டாலும் சில சட்டவிரோத செயற்பாடுகளை தவிர்க்க இணைந்து செயற்படவுள்ளோம்.

பனை சார் ஏற்றுமதியாளர்களுக்கான கூட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது. மேலும் உலகெங்கி லும் வாழும் உறவுகளுக்காக பனை சார் உற்பத்திகள் தயாராக உள்ளன. – என அவர் மேலும் தெரிவித்தார்.



# 10 ஆவது நாடாளுமன்றத்தின் முதலாவது அமர்வு இன்று

10ஆவது நாடாளுமன்றத்தின் முதலாவது அமர்விற்காக இன்று 9 மணியளவில் வருகைதருமாறு நாடாளுமன்ற செயலாளர் குஷானி ரோஹணதீர அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அறிவித்துள்ளார்.

காலை 10 மணிக்கு புதிய அமர்வு ஆரம்பமாகும் என அவர் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களை பதிவு செய்யும் நடவடிக்கை நேற்றும் முன்னெடுக்கப்பட்டது.

கை விரல் அடையாளத்தை பதிவு செய்வதற்காக நாடாளுமன்ற உறுப்பினர்களின் வருகை கட்டாயமானது என நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, புதிதாக தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் 25, 26 மற்றும் 27ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

இந்த செயலமர்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களின் வகிபாகம் மற்றும் நாடாளுமன்ற செயற்பாடுகள் தொடர்பில் விளக்கமளிக்கப்படவுள்ளது.




# மினுவாங்கொடை கொள்ளை; சந்தேக நபர்கள் மூவர் கைது

மினுவாங்கொடை பிரதேசத்தில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவம் தொடர்பில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொள்ளையிடப்பட்ட பணத்தில் 3 கோடியே 15 லட்சம் ரூபாவிற்கும் அதிக பணம் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவத்துடன் தொடர்புயை பிரதான சந்தேகநபர் இதுவரை கைது செய்யப்படவில்லை என்றும் வானின் சாரதியே இந்தக் கொள்ளைச் சம்பவத்தை வழிநடத்தியுள்ளார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

82 லட்சம் ரூபா பணம் வானிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

7 கோடியே 95 லட்சம் ரூபாவிற்கும் அதிக பணம் இதன்போது கொள்ளையிடப்பட்டுள்ளது.

சந்தேகநபர் மேற்படி வாகனத்தை கம்பஹா உக்கல்பொட பகுதியில் கைவிட்டுச்சென்ற நிலையில் கடந்த திங்கள் கிழமை பிற்பகல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பான விசாரணைகளுக்காக 8 விசாரணைக் குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன் மேற்படி பகுதியில் உள்ள பாதுகாப்பு கமராக்களின் ஊடாக கொள்ளையர்கள் தப்பிச் சென்ற பகுதி தொடர்பான தகவல்கள் சேகரிக்கப்பட்டு வருவதாக பொலிஸார் கூறினர்.

பணத்தைக் கொள்ளையிட்டு தப்பிச் சென்ற சந்தேகநபர்கள் தொடர்பில் தகவல்கள் தெரிந்திருந்தால் அது தொடர்பில் அறிவிக்குமாறு பொது மக்களிடம் பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அதற்கமைய கம்பஹா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் 0718591608 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு அல்லது சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் 0718591610 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு தகவல்களை வழங்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பல்கலைக்கு விண்ணப்பித்த மாணவர்களுக்கு பதிவு செய்வதற்கான கால அவகாசம் நிறைவு

கடந்த உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் பல்கலைக் கழகங்களுக்கு விண்ணப்பித்த மாணவர்களுக்கு பதிவு செய்வதற்காக வழங்கப்பட்ட கால அவகாசம் நிறைவடைந்துள்ளது.

இந்த காலப்பகுதிக்குள் சுமார் 40,000 மாணவர்கள் பதிவு செய்துள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதனடிப்படையில் அனைத்து மருத்துவ பீடங்கள் மற்றும் பேராதனை பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடம் ஆகியவற்றுக்கு பதிவு ஆவணங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டு 43,000 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் பல்கலைக் கழகங்களுக்கு விண்ணப்பித்துள்ளனர்.

இவற்றில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் பதிவு செய்யாத மாணவர்களுக்கு பதிலாக வேறு மாணவர்களை இணைத்துக் கொள்ள நடவடிக்கை எடுப்பதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு தெரிவித்துள்ளது.




# உயர்தர பரீட்சையை பிற்போடுவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை; கல்வி அமைச்சு




2024 உயர்தர பரீட்சைக்கான அனைத்து ஏற்பாடுகளும் நிறைவடைந்துள்ள நிலையில், பரீட்சையை பிற்போடுவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என கல்வி அமைச்சு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

உயர்தர பரீட்சையை ஒத்திவைக் குமாறு பல்வேறு தரப்பினர் விடுத்த கோரிக்கைகள் தொடர்பில் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு அவதானம் செலுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

2024 ஆம் ஆண்டுக்கான உயர்தர பரீட்சை திட்டமிடப்பட்ட திகதிகளில், அதாவது எதிர்வரும் 25ஆம் திகதி முதல் டிசம்பர் மாதம் 20ஆம் திகதி வரை நடைபெறும் என, பரீட்சைகள் திணைக்களம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# ஆறுமுக நாவலரின் நினைவு வைபவம் சனிக்கிழமை துர்க்காதேவி மண்டபத்தில்

நல்லை நகர் ஆறுமுக நாவலரது நினைவு நிகழ்வு நாளை மறுதினம் சனிக்கிழமை (23) முற்பகல் 10 மணிக்கு நல்லூர் ஶ்ரீ துர்க்கா தேவி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவர் செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் வரவேற்புரையைத் தெல்லிப்பழை ஶ்ரீதுர்க்காதேவி தேவஸ்தான உப தலைவர் சி. அருளானந்தசிவம் நிகழ்த்த, கூட்டுப் பிரார்த்தனையைத் துர்க்காபுரம் மகளிர் இல்ல மாணவிகள் நிகழ்த்துவர்.



தொடர்ந்து துர்க்காபுரம் மகளிர் இல்ல மாணவி செல்வி கஜானா நகுலேஸ்வரனின் பேச்சு இடம்பெறும்.

இதனையடுத்துச் சிறப்புரை இடம்பெறும். சிறப்புரையை 'நாவலர் பெருமானின் வாழ்வும் வளமும்' என்னும் தலைப்பில் யாழ். பல்கலைக்கழகக் கல்வித்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் இ.சர்வேஸ்வரா நிகழ்த்துவார்.

நன்றியுரையைத் தெல்லிப்பழை ஶ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான நிர்வாக உப செயலாளர் இ. இராதாகிருஷ்ணா நிகழ்த்துவார்.

தொடர்ந்து மகேஸ்வர பூசை இடம்பெறும் என்று தெல்லிப்பழை ஶ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தான நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.



# பெரிய வெங்காய விலை சடுதியாக அதிகரிப்பு

உள்ளூர் சந்தையில் பெரிய வெங்காயத்தின் விலை சடுதியாக அதிகரித்துள்ளது.

எதிர்காலத்தில் பெரிய வெங்காயத்தின் விலை 600 ரூபா வரை அதிகரிக்கலாம் என தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்தின் வர்த்தகர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

# ஸ்ரீசத்யசாயி பாபாவின் 99ஆவது ஜனன தினம்



கொழும்பு ஸ்ரீசத்ய சாயி பாபா மத்திய நிலையம் ஏற்பாட்டில், பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் 99ஆவது ஜனன தின நிகழ்வுகள், எதிர்வரும் 23ஆம் திகதி, சனிக்கிழமை, காலை 5 மணி தொடக்கம் இரவு 8 மணி வரை, கொழும்பு, புதுச் செட்டித் தெருவிலுள்ள, சாயி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

அதிகாலையில் ஓங்காரம், சுப்பிரபாதம் மற்றும் பிரசாந்தி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, சத்ய சாயி பூஜை, பஜனை, திருஊஞ்சல், மங்கள ஆராத்தி, விஷேடமாக பிறந்தநாள் கேக் வெட்டும் வைபவத்துடன், அன்னதான நிகழ்வுகள் இடம்பெறும்.

அன்று மாலை, புட்டபர்த்தி மகா சமாதியில் வைத்து பூஜித்து எடுத்துவரப்பட்ட, பாபாவின் ஐம்பொன் திருவுருவச்சிலை நவ அபிஷேகத்துடன், சித்திரத் தேரில் திருவுலா வரவுள்ளது. இலங்கையிலுள்ள சாயி ஸ்தாபனங்களிலேயே, கொழும்பு சாயி நிலையத்தில் மட்டும் நடைபெறும் சிறப்பான நிகழ்வு இதுவாகும்.





# சீனத் தூதுவர் திருகோணமலையில்

**(எஸ்.கீதபொன்கலன்)**

இலங்கைக்கான சீன நாட்டின் தூதுவர் கியூ செங் வொங் நேற்றுக் கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்தலால் ரத்தனசேகரவை திருகோணமலையில் உள்ள ஆளுநர் பணிமனையில் சந்தித்து கலந்துரையாடினார்.

தமது நாட்டின் சார்பில், கிழக்கு மாகாண பொதுமக்களுக்கான வாழ்வாதார திட்டங்களுக்கென ரூபா 8 மில்லியன் நிதி உதவியையும் சீனத்தூதுவர் மாகாண ஆளுநரிடம் கையளித்தார்.





# இன்றைய ராசி பலன்கள் - 21.11.2024




உங்கள் விருப்பங்கள் இன்று நிறைவேறும். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள்.

சக பணியாளர்கள் உதவிகரமாகவும் ஆதரவாகவும் இருப்பார்கள். பணியைப் பொறுத்தவரை நீங்கள் திறம்பட பணியாற்றி உங்கள் செயல்திறனை நிரூபிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு செல்வீர்கள். இதனால் உங்கள் துணையை நன்கு புரிந்து கொள்வீர்கள்.

பணம் அதிக அளவில் காணப்படும். சுப நிகழ்சிக்காக பணத்தை பயன் படுத்தலாம்.

நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




பொதுவில் இன்றைய நாள் சிறப்பாக இருக்கும். உங்களுக்கு பயன் தரும் முடிவுகளை நீங்கள் இன்று எடுக்கலாம்.

நீங்கள் உங்கள் இலக்குகளை அமைத்து அதனை அடைவீர்கள். புதிய வாய்ப்புகள் உங்களுக்கு கிடைப்பதற்கான சாத்தியம் உள்ளது.

உங்கள் துணையுடன் அன்பாக மகிழ்ச்சியாக நடந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே நல்லுறவு வளரும்.

உங்கள் கையிலுள்ள பணம் உங்களுக்கு போதுமானதாக இருக்கும். அதில் சிறிது பணத்தை பயனுள்ள விஷயங்களுக்கு செலவு செய்வீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இன்று நீங்கள் முழு ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள்.




நீங்கள் உற்சாகமாகவும் ஆற்றலுடனும் இருப்பது நல்லது. பலன்களை எதிர்பாராது செயால்பட்டால் வெற்றி கிடைக்கும்.

பணியிடச் சூழல் உங்களுக்கு உகந்ததாக இருக்காது. அதிகப் பணிகள் மற்றும் அசௌகரியங்கள் உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

நீங்கள் எந்த விஷயத்தையும் தீவிரமாக எடுத்துக் கொள்வீர்கள். சிறிய விஷயத்திற்கு வருத்தப் படுவது உறவை பாதிக்கும்.

உங்கள் வீட்டின் முன்னேற்றத்திற்காக பணம் செலவு செய்வீர்கள். இதனால் அதிக செலவு ஏற்படும். நெருங்கிய சொந்தங்களுக்காக பணம் செலவு செய்வீர்கள்.

உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துவது சிறந்தது.




புத்திசாலித்தனம் மற்றும் சமநிலை அணுகுமுறை வெற்றிக்கு வழிகாட்டும். இன்றைய நாளை நன்கு பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

பணியில் மிதமான முன்னேற்றம் காணப்படும். நேரப்படி பணிகளை செய்வதன் மூலம் திறமையாக பணியாற்ற முடியும்.

நீங்கள் உணர்ச்சி வசப்படுவீர்கள். அதனை உங்கள் துணையிடம் வெளிபடுத்துவீர்கள். இதனால் உறவின் நல்லிணக்கம் பாதிக்கும்.

நிதி வளர்ச்சி சுமாராக இருக்கும். பணத்தை கவனமாகச் செலவு செய்யவும்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. அமைதியாக இருந்து பதட்டத்தை தவிர்ப்பதன் மூலம் ஆரோக்கியத்தை பராமரிக்கலாம்.




இன்றைய நாள் மிகவும் அற்புதமான நாள். இன்று உங்களிடம் அதிக ஆற்றலும் உறுதியும் காணப்படும்.

பணியில் உங்கள் முயற்சிக்கு வெற்றி கிட்டும். நீங்கள் தன்னம்பிக்கையுடன் பணிகளை மேற்கொள்வீர்கள்.

உங்கள் துணையுடன் நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். குடும்பத்தில் சுப நிகழ்சிகள் நடைபெறக் காண்பீர்கள்.

நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும். நிதியில் ஸ்திரத்தன்மை பெறுவீர்கள்.

ஆரோக்கியத்தில் எந்தப் பிரச்சினையும் இருக்காது. உறுதியான போக்கு காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்றைய நாள் முன்னேற்றத்திற்கு உகந்த நாள் அல்ல. உங்கள் அணுகுமுறையில் யதார்த்தம் தேவை.

உங்கள் பணிகளை மேற்கொள்ள பொறுமை அவசியம். பணிச்சுமையும் அதிகமாக காணப்படும்.

நீங்கள் உணர்ச்சி வசப்பட்டு உங்கள் துணையுடன் சண்டையிடுவீர்கள்.உறவில் நல்லிணக்கத்தை பராமரிக்க இத்தகைய போக்கை தவிர்க்க வேண்டும்.

பணப்புழக்கம் குறைந்து காணப்படும். அதிகரிக்கும் செலவுகள் கவலையை அளிக்கும்.

தலைவலி ஏற்பட வாய்ப்புள்ளது. அமைதியாக கட்டுப்பாட்டுடன் இருப்பது நல்லது.




இன்று இனிமையான தருணங்கள் காத்திருக்கின்றன. பொழுதுபோக்கு நிகழ்ச்சியில் பங்கு பெறுவதன் மூலம் நீங்கள் பதட்டத்திலிருந்து விடுபடலாம்.

உங்கள் பணியைப் பொறுத்த வரை சுய வளர்ச்சிக்கு உற்சாகமான நேரம். புதிய முயற்சிகளும் சாத்தியம்.

உங்கள் துணையுடன் நண்பர் வீட்டு திருமணத்திற்கு செல்வீர்கள். இருவரும் உற்சாகமாக நேரத்தை கழிப்பீர்கள்.

நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும். உங்கள் குடும்பத்துடன் வெளியிடங்களுக்கு செல்வீர்கள்.

சிறந்த மன உறுதி காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். நீங்கள் திருப்தியாக உணர்வீர்கள்.




இன்று இனிமையான தருணங்கள் காத்திருக்கின்றன. பொழுதுபோக்கு நிகழ்ச்சியில் பங்கு பெறுவதன் மூலம் நீங்கள் பதட்டத்திலிருந்து விடுபடலாம்.

உங்கள் பணியைப் பொறுத்த வரை சுய வளர்ச்சிக்கு உற்சாகமான நேரம். புதிய முயற்சிகளும் சாத்தியம்.

உங்கள் துணையுடன் நண்பர் வீட்டு திருமணத்திற்கு செல்வீர்கள். இருவரும் உற்சாகமாக நேரத்தை கழிப்பீர்கள்.

நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும். உங்கள் குடும்பத்துடன் வெளியிடங்களுக்கு செல்வீர்கள்.

சிறந்த மன உறுதி காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். நீங்கள் திருப்தியாக உணர்வீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 21.11.2024




இன்று பண வரவு காணப்படலாம். இன்று உங்கள் செயல்களை முடிப்பதற்கு திட்டமிடுவீர்கள். நீண்ட கால திட்டங்களுக்கு இந்த நாள் உகந்த நாள்.

உங்கள் பணியில் புதிய வாய்ப்புகள் வருவதற்கான வாய்ப்புகள் உள்ளது. கடின உழைப்பு மற்றும் சிறந்த முயற்சி மூலம் நீங்கள் சிறந்த நிலைக்கு வருவீர்கள். இதன் மூலம் உங்களுக்கு அங்கீகாரம் கிடைக்கும்.

நீங்கள் உங்கள் துணையுடன் வெளிப்படையாக பழகுவீர்கள். இதனால் இருவருக்கிடையே நல்லிணக்கம் வலுப்படும்.

உங்கள் நிதி நிலைமை திருப்திகரமாக இருக்கும். பணத்தை பயனுள்ள நோக்கத்திற்கு செலவு செய்வீர்கள்.

உடல் ஆரோக்கியம் பொதுவாக சிறப்பாக இருக்கும்.




இன்றைய நாள் சற்று மந்தமாக காணப்படும். ஆன்மீக ஈடுபாடு மன நிம்மதி மற்றும் ஆறுதலை அளிக்கும்.

வேலை தொடர்பான பயணம் காணப்படுகின்றது. அதன் மூலம் சுமாரான பலன்களே கிடைக்கும். கடின உழைப்பின் மூலம் மட்டுமே வெற்றி கிட்டும்.

மகிழ்ச்சியாக இருக்க அகந்தை உணர்வை தவிர்க்கவும். உங்கள் துணையுடன் மனம் திறந்து பழகவும்.

அதிகரிக்கும் பொறுப்புகள் காரணமாக கூடுதல் செலவுகள் ஏற்படும். இது உங்களுக்கு மிகுந்த கவலையை அளிக்கும்.

ஆரோக்கியம் சுமாராக இருக்கும். தலை வலி ஏற்பட வாய்ப்புள்ளது.அது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும்.




நீங்கள் சுய முன்னேற்றப்பாதையில் செல்வீர்கள். நீங்கள் இன்று சில லட்சியங்களை அடைய வேண்டும் என்று உங்களை தயார் படுத்திக் கொண்டு இந்த நாளை சுமூகமாக்குவீர்கள்.

பணியிடச் சூழல் உங்களுக்கு சாதகமாக இருக்கும். உங்கள் பணியில் வெற்றி பெற உங்கள் மனதை செலுத்துவீர்கள்.

நீங்கள் உங்கள் துணையுடன் நட்பாகவும் அன்பாகவும் நடந்து கொள்வீர்கள். பயணத்தின் போது இருவரும் உற்சாகமான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள்.

கடின உழைப்பின் மூலம் மட்டுமே வெற்றி கிடைக்கும். பணப்புழக்கம் அதிகரிக்கும்.

ஆரோக்கியம் பொதுவாக சிறப்பாக இருக்கும். அமைதியான அணுகுமுறை மூலம் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். நம்பிக்கை உணர்வுடன் காணப்படுவீர்கள்.




நீங்கள் தைரியமாக சரியான பாதையில் செயல்பட வேண்டியது அவசியம். உங்கள் பயத்தை ஒதுக்கித் தள்ளி நம்பிக்கையுடன் செயல்படுங்கள்.

உங்கள் பணிகளை திறம்பட ஆற்ற உங்களுக்கு பொறுமை அவசியம். நீங்கள் யோசித்து சிறப்பாக செயல்பட வேண்டும்.

உங்கள் துணையுடன் பேசும்போது இணக்கம் குறைந்து காணப்படும். முதல் முறை பேசிக்கொள்வது போல பேசுவீர்கள்.

இன்று கூடுதல் செலவுகள் ஏற்படும் என்பதால் உங்களுக்கு கவலை ஏற்படும். இது தவிர்க்க முடியாதது. எனவிய கவனமாக இருக்கவும்.

கண்களில் எரிச்சல் பாதிப்பை ஏற்படுத்தும். மருத்துவம் பார்த்துக் கொள்வது நல்லது.

